## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண் – 46

# தமிழ் வளர்ச்சி

# 2023-2024


**தங்கம் தென்னரசு**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம்,
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு,
தொல்லியல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# தமிழ் வளர்ச்சித் துறை

## 2023 – 2024

### பொருளடக்கம்


| தொ. எண் | பொருண்மை | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–4 |
| 1 | தமிழ் வளர்ச்சித் துறை | 5–57 |
| 2 | மொழிபெயர்ப்பு | 58–60 |
| 3 | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 61–76 |
| 4 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 77–94 |
| 5 | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 95–102 |
| 6 | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 103–115 |
| 7 | செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் | 116–124 |
| 8 | நீடித்த நிலையான வளர்ச்சி | 125–126 |
| | நிறைவுரை | 127 |
| | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 128 |

# தமிழ் வளர்ச்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2023-2024

## முன்னுரை

ஒரு மொழியே அந்த மொழிக்குரிய இனத்தின் நாகரிகம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடித்தளமாகின்றது. மொழியின்றி மனிதன் இல்லை என்பது மட்டுமல்ல, அந்த மனிதனுக்கு சமூக உறவும், முன்னேற்றமும் இல்லாமற் போய் விடுகிறது. இதை மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள்

**"ஒருநாட்டுச்செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணை இன்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் வசதியாகவும் வாழ்வது அரிது. முன்னோர் அரும்பாடுபட்டு ஈட்டிய அறிவுச்செல்வம் எல்லாம் மொழி வாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றன"** என்கிறார்.

இன்றுவரை மானுட இனத்தின் அறிவியல்சார் கண்டுபிடிப்புகளில் மொழியே மிகச் சிறந்த கருவியாகத் திகழ்கிறது. மனித இனத்தின் தொடக்கக் காலத்தில் மொழி என்பது கருத்தறிவிக்கும் கருவியாக மட்டுமே கருதப்பட்ட நிலையில்,காலக் கடிகாரத்தின் ஓட்டத்தில்

மொழியானது ஒலி வடிவமாகவும். வரி வடிவமாகவும் பரிணாமம் பெற்று இன்று மொழி ஓர் இனத்தின் பண்பாடாகவும் அடையாளமாகவும் திகழ்கிறது.

மனிதன் தோன்றிய காலத்தே உடன் பிறந்த தமிழ், இன்றளவும் இளமை குன்றாது பல இலக்கிய, இலக்கண நூல்களை அணிகலன்களாகப் பெற்று இடையறவுபடாமல் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் உயர்ந்தோங்கி நிற்கிறது.

தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக விளங்கும் தமிழ், இன்று உலகின் மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி என்றும், பல மொழிகளின் தாய்மொழி என்றும் ஆய்வுகள் உணர்த்துகின்றன.

'என்றும் உள செந்தமிழ்', 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி', 'என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினை உடைய தமிழ்' என்றெல்லாம் புலவர் பெருமக்கள் உரைகளில் போற்றிப் புகழ்வதன் மூலம், தமிழ் மொழியின் பிறப்பு அது தோன்றிய காலம் கண்டுணர முடியாத ஒன்றாக உள்ளதைஉட்பொருளாகச்சுட்டப்படுவதைஉணரலாம்.

தமிழ் மிகுந்த வளர்ச்சி பெற்று உயர்ந்திருந்த காலத்தில்உருவாகியதமிழ்மொழியின்கட்டமைப்பையும் தமிழரின் பண்பாட்டையும் எடுத்தியம்பிய நூல் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம் என்பது பேருண்மை. இத்தகைய நூலை உருவாக்கும் அளவுக்கு அக்காலத்திலேயே

தரவுகளைப் பெற்றிருந்த மொழி தமிழ் என்பதன் மூலம் தமிழின் தொன்மையினையும் வளத்தினையும் அறிய முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நம் தாய்மொழியாம் தமிழைப் பற்றிக் கூறும் போது,

**"நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய் மொழி பிற மொழிகளுடன், ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் மொழியாளர்கள் எல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றுள்ளீர்கள்? ஈராயிரமாண்டுக் காலமாகவா மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகிறது? ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும், பொறாமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலே தான் தமிழ் மொழி இருக்கின்றது"** எனப் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

மொழியின் வாழ்நிலை, அதன் காலம் எனக் கணக்கிட்டால் தமிழின் தோற்றம் என்பது, ஏறத்தாழ பேச்சு வழக்கில் ஐந்தாயிரம் ஆண்டுகளையும் எழுத்து வழக்கில் மூவாயிரம் ஆண்டுகளையும் கடந்து வாழும் மொழி என்பதை உணர இயலும்.

தமிழில் பல்துறை வளங்களைச் செழிக்கச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டிப் பொன்னாகப் பொலியச் செய்வதுமான பணிகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது. இப்பணிகளுக்காக இத்துறை வகுத்து அமைத்துக் கொண்டுள்ள கொள்கைகள் உரைக்கப் பெறுகின்றன.

## இயல்–1

# தமிழ் வளர்ச்சித் துறை

## 1. ஆட்சிமொழிச் செயலாக்கம்

### 1.1.1. ஆய்வு

தமிழ்நாடு மாநிலத்தில் அலுவல் முறை வாயிலாகத் தமிழ் மொழியை ஏற்று 'தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்' 27.12.1956–இல் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி, தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளில் தமிழ்மொழி பயன்படுத்துவதை உறுதிசெய்திடப் பின்வரும் வகையில் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.1.2. ஆட்சிமொழிப் பயிலரங்கம் – கருத்தரங்கம்

ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்திடும் வகையில், அரசுப் பணியாளர்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகவும், மிகுதியாகவும் பயன்படுத்திடப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. பயிற்சி வகுப்பில் அலுவலகக் குறிப்புகள், வரைவுகளில் பிழை நீக்கி எழுதுதல், ஆட்சிமொழி வரலாறு சட்டம்; ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித்

திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்; கணினியில் தமிழ் ஒருங்குறிப் பயன்பாடு எனப் பன்முகப்பாங்கில் மின்காட்சியுரையுடன் 38 மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு பயிலரங்கம் நடத்தப்பெறுகிறது.

மேலும், மொழி வல்லுநர்கள் வாயிலாக ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி குறித்த கருத்தரங்கம் 38 மாவட்டங்களில் நடத்தப்பெறுகின்றன. ஆண்டுதோறும் இரு நிகழ்வுகளுக்கும் சேர்த்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.70,000/– வீதம் 38 மாவட்டங்களுக்கும் நிதி வழங்கப்பெறுகிறது.

### 1.1.3. ஆட்சிமொழிச் சட்ட வாரம்

தமிழ்நாட்டின் அலுவல் மொழியாகத் தமிழை நடைமுறைப்படுத்திட 'தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட 27.12.1956–ஆம் நாளினை நினைவுகூரும் வகையில் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டவும் நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும், விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள்தோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு வாரம் நடத்தப்பெறுகிறது. அதற்கென ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஓர் இலட்சம் வீதம் 38 இலட்சம் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் நாள் | 1. கணினித் தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்<br>2. ஒருங்குறிபயன்பாடு குறித்துப்பயிற்சி அளித்தல். |
| இரண்டாம் நாள் | ஆட்சிமொழிச் சட்டம் / வரலாறு உள்ளிட்ட மின்காட்சியுரை நடத்துதல் |
| மூன்றாம் நாள் | தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்பு |
| நான்காம் நாள் | வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைப்பதற்கான வணிக நிறுவன உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம். |
| ஐந்தாம் நாள் | ஆட்சிமொழிப் பட்டிமன்றம் நடத்துதல் |
| ஆறாம் நாள் | ஒன்றியம்,வட்டம்,மாவட்டம் அளவிலான ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் நடத்துதல். |
| ஏழாம் நாள் | மாவட்ட ஆட்சியர் தலைமையில் தமிழ் அமைப்புகள் பள்ளி, கல்லூரி மாணவர்களுடன் இணைந்து தமிழ் மரபு சார்ந்த கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வுப் பேரணி நடத்துதல். |

### 1.1.4. அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி (சென்னை மாவட்டம்)

சென்னை மாவட்டத்தில் மட்டும் அமைந்துள்ள அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களில் பணிபுரியும் அரசுப்பணியாளர்களுக்குத் துறைவாரியாக ஓராண்டுக்கு ஐந்து தமிழ் ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன.

இத்திட்டப் பயிற்சியில் பங்கு பெறுபவர்களுக்கு ஆட்சிமொழிச் சட்டம் / வரலாறு, ஆட்சிமொழிச் செயலாக்கமும் அரசாணைகளும், கலைச் சொல்லாக்கமும் மொழிபெயர்ப்பும், மொழிப்பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், தமிழ் ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் என விரிவான முறையில் இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஒரு பயிற்சி வகுப்பிற்கு ரூ.30,000/– வீதம் ஐந்து பயிற்சி வகுப்புகளுக்கும் ரூ.1,50,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு 2022–2023–ஆம் நிதியாண்டில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

### 1.1.5. சிறந்த குறிப்புகள், வரைவுகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசுகள்

அரசு மற்றும் அரசு சார்ந்த பணியாளர்கள் தமிழில் குறிப்புகள், வரைவுகள் சிறந்த முறையிலும் எளிய நடையிலும் எழுதுவதை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலை, சார்நிலை, உள்ளாட்சி நிலை, தன்னாட்சி நிலை ஆகிய நான்கு நிலைகளிலும் சிறந்த முறையில் வரைவுகள், குறிப்புகள் எழுதும் பணியாளர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு முதற் பரிசாக ரூ.3000/–, இரண்டாம் பரிசாக ரூ.2000/–, மூன்றாம் பரிசாக ரூ.1000/– எனப் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் 2007–2008 முதல் நாளிது வரை ஐம்பத்தாறு பேர் முதற்பரிசும் (ரூ.3000/–), நாற்பத்தைந்து பேர் இரண்டாம் பரிசும் (ரூ.2000/–), முப்பத்திரண்டு பேர் மூன்றாம் பரிசும் (ரூ.1000/–) பெற்றுள்ளனர்.

### 1.1.6. அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் முழக்கமான 'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' என்னும் இலக்கை எய்திய அரசு அலுவலகங்களைப் பாராட்டும் வகையில் அவற்றிற்குக் கேடயமும்

சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசுத் துறை, வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நிலை அலுவலகங்கள் என்ற வகைப்பாடுகளின் அடிப்படையில் ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்திவரும் அலுவலகங்கள் தெரிவு செய்யப்பட்டுச் சென்ற ஆண்டில் 38 மாவட்டங்களுக்கும் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

## 1.2. விழாக்கள்

### 1.2.1. திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும், தமிழ்ப் படைப்பாற்றலையும், தமிழ்த் தொண்டினையும் நினைவுகூரும் வகையில் பின்வரும் அறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் வணக்கமும் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவள்ளுவர் சிலை | வள்ளுவர் கோட்டம் | தை – 2ஆம் நாள் (திருவள்ளுவர் திருநாள்) |
| 2 | தமிழ்த்தாத்தா உ.வே.சா. சிலை | மாநிலக் கல்லூரி | பிப்ரவரி – 19 (உ.வே. சா. பிறந்தநாள்) |
| 3 | தமிழ் மூதாட்டி ஔவையார் சிலை | மெரினா கடற்கரை | மார்ச்சு – 08 (உலக மகளிர் நாள்) |
| 4 | கவிச்சக்கரவர்த்தி கம்பர் சிலை | அண்ணா சதுக்கம் | மார்ச்சு – 24 (கம்பர் திருநாள்) |
| 5 | இளங்கோவடிகள் சிலை | அண்ணா சதுக்கம் | ஏப்பிரல் – 24 (இளங்கோவடிகள் திருநாள்) |
| 6 | தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் சிலை | மெரினா கடற்கரை | மே – 7 (இராபர்ட் கால்டுவெல் பிறந்தநாள்) |
| 7 | தனித்தமிழ் இயக்ககத்தின் தந்தை மறைமலை யடிகளார் சிலை | பல்லவபுரம், செங்கல்பட்டு மாவட்டம் | ஜீலை – 15 (மறைமலையடிகள் பிறந்தநாள்) |
| 8 | தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலை | துண்டலம், திருவள்ளூர் மாவட்டம் | ஆகஸ்டு – 26 (திரு.வி.க பிறந்தநாள்) |
| 9 | தொல்காப்பியர் சிலை | 1) சென்னைப் பல்கலைக் கழக மெரினா வளாகம்.<br>2) காப்பியக் காடு, கன்னியாகுமரி மாவட்டம். | மே – 05 |

## 1.2.2. சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்குச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசால், சங்கக்காலப் புலவர்களை நினைவுகூரும் வகையில் நிறுவப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ளநான்கு நினைவுத்தூண்களுக்கும் ஆண்டுதோறும் ஏப்ரல் 29–ஆம் நாளான தமிழ்க்கவிஞர் நாளில் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | புலவர்கள் பெயர் | நிறுவப்பட்டுள்ள இடம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | ஒக்கூர் மாசாத்தியார் | ஒக்கூர் | சிவகங்கை |
| 2 | நல்லூர் நத்தத்தனார் | இடைக்கழிநாடு | செங்கற்பட்டு |
| 3 | மாங்குடி மருதனார் | மாங்குடி | தென்காசி |
| 4 | கருவூர் புலவர்கள் பன்னிருவர் | கரூர் | கரூர் |

தற்போது புதிதாக கணியன் பூங்குன்றனாருக்கு சிவகங்கைமாவட்டம்மகிபாலன்பட்டியிலும்,கபிலருக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரிலும் நினைவுத்தூண்கள் நிறுவப்பட்டு திறக்கப்படவுள்ளன.

மேலும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரிக்கு நினைவுத்தூணும், திருச்சிராப்பள்ளியில் சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் 40 பேருக்கு சேர்த்து ஒரு நினைவுத்தூணும், மதுரை மாவட்டம் திருமங்கலம் திரளி கிராமத்தில் நக்கீரருக்கு நினைவுத்தூணும் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு

நினைவுத்தூணும் நிறுவிட நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு நினைவுத்தூண்களுக்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நினைவுத்தூண்கள் பூம்புகார் நிறுவனத்தின் வாயிலாக நிறுவப்படவுள்ளன.

### 1.2.3. தமிழ்க் கவிஞர் நாள் விழா

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளைத் தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ஏப்ரல் 29–ஆம் நாளில் கொண்டாடி வருகிறது. கடந்த 29.04.2022–இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாள் விழாவில் பாவேந்தரைப் போற்றும் வண்ணம் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

மேலும், அரசு கவின் கலைக்கல்லூரி மாணவர்களைக் கொண்டு சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துக்கள் அடங்கிய ஓவியங்கள் வரையப்பட்டு வண்ணமயமான நூலாகத் தயாரித்து வெளியிடப்பெற்றது.

### 1.2.4. தமிழ்நாடு நாள் விழா (ஜுலை திங்கள் 18–ஆம் நாள்)

மெட்ராஸ் மாகாணம் என்று இருந்த நிருவாக நிலப்பரப்பு, அறிஞர் அண்ணா அவர்களால் 1967–ஆம் ஆண்டு ஜீலை 18–ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் "தமிழ்நாடு" என்று பெயர்

சூட்டப்பட்ட நாளைத் தான் "தமிழ்நாடு நாள்" என்று கொண்டாடப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.10.2021 அன்று தாய்த் தமிழ்நாட்டிற்குத் "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜீலை 18–ஆம் நாளே "தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்" என அறிவித்தார்கள். அதன்படி, 18.07.2022–இல் தமிழ்நாடு அரசால் சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப்பட்டது. அதில் தமிழ்நாடு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், மாவட்ட/மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் கீழ்க்காணுமாறு வழங்கப்பட்டன.

| வகைப்பாடு | பரிசு / விவர–ங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை | முதற் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |
| மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகை | முதற் பரிசு | 50,000 |
| | இரண்டாம் பரிசு | 30,000 |
| | மூன்றாம் பரிசு | 20,000 |

### 1.2.5. இலக்கியச் சங்கமம்

நாட்டுப்புறக்கலை விழாவான 'நம்ம ஊரு திருவிழா'வின் சென்னைச் சங்கமத்தின் ஓர் அங்கமாகத் தமிழ் இலக்கியச் சங்கமம் என்னும் நிகழ்ச்சி சென்னை அடையாறு, இராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை ரூபாய் 12,45,000/– செலவில் நடத்தப்பட்டது.

### 1.2.6. உலகத் தாய்மொழி நாள் விழா

ஐக்கிய நாட்டுக் கல்வி மற்றும் கலைப் பண்பாட்டு அவை, பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்க அறிவித்தது. அதன்படி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில் 2022–2023–ஆம் நிதியாண்டில் 21.02.2023 அன்று சென்னையிலுள்ள நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியில் பட்டிமன்றம், பாட்டரங்கம், இளையோர் அரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

### 1.3. விருதுகள்

தமிழ்மொழியின் தொன்மை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அனைவரும் உணரும்

வண்ணம் தமிழின் பெருமையைத் தளராது உயர்த்திப் பிடித்து வரும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்குவதைத் தூய தமிழ்த் தொண்டாகக் கருதி அரசு செயன்மையாற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022–ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறை, உலகத்தமிழ்ச்சங்கம்மற்றும்செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் ஆகியவற்றின் வாயிலாக 39 விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருதுகளுக்குரிய விருதுத் தொகை ரூபாய் ஓர் இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பெற்றது.

### 1.3.1. பாவேந்தர் பாரதிதாசன் விருது

தமிழியக்கம் கண்ட புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் கவி மரபினைப் போற்றும் வகையில், அவர்தம் மரபில் படைப்புகளை வழங்கும் சிறந்த கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. **விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு.வாலாசா வல்லவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 86 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.2. தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது

தமிழுக்குபன்முகத்தான்தொண்டாற்றிவரும்சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியப் படைப்பாளர் ஒருவருக்குத் 'தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது' வழங்கப்பட்டு வருகிறது. **விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான 'திரு.வி.க.விருது' நாமக்கல் திரு.பொ.வேல்சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 43 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.3. திருவள்ளுவர் விருது

மானுடமறையாகிய திருக்குறளில் அறிவுறுத்தப்பட்டுள்ள அறநெறிகளைப் போற்றியும் திருவள்ளுவத்தின் பெருமையை உலகோர் அனைவருக்கும் உணர்த்தும் வகையிலும் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு திருவள்ளுவர் திருநாள் அன்றுதிருவள்ளுவர்விருதுவழங்கப்பெற்றுவருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2023ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது இரணியன் நா.கு. பொன்னுசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை

38 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.4. மகாகவி பாரதியார் விருது

பாட்டுக்கொரு புலவராம் மகாகவி பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் படைப்புகளையும் பொதுமக்கள் உணர்ந்து பயன்பெறும் வகையில் தொண்டாற்றும் சிறந்த தமிழ்ப் பெருமக்களுக்கு, மகாகவி பாரதியார் விருது அளிக்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம்,** தகுதியுரை, **பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் விருது முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 25 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.5. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

முத்தமிழ்க் காவலர் நெறியில், தமிழ்த் தொண்டாற்றும் தமிழ் அறிஞர் ஒருவர்க்கு, ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம்,** தகுதியுரை, **பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான முத்தமிழ்க் காவலர்

கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் முகமது மேத்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 21 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.6. பேரறிஞர் அண்ணா விருது

அல்லும் பகலும் அயராது உழைத்து, அருந்தமிழ்நாட்டை உயர்த்தி வளர்த்த பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்ச் சமுதாயம் எத்திக்கிலும்வளர்ச்சிபெற்றுத்தழைத்தோங்கவேண்டும் என்று தம் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டவர் ஆவார். அவரது சீரிய சிந்தனைச் செயலாக்கத்தைத் தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, மக்கள் நலப்பணியில் மக்களோடு இணைந்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது திரு. உபயதுல்லா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 17 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.7. பெருந்தலைவர் காமராசர் விருது

பெருந்தலைவர் காமராசர் அடிச்சுவட்டில், அவர்தம் கொள்கை நெறியில், தமிழ்நாட்டு மக்களுக்காகச்

சேவை புரிந்துவரும் ஒருவருக்கு, ஆண்டுதோறும், இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான பெருந்தலைவர் காமராசர் விருது திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்குவழங்கப்பட்டது. இதுவரை 17 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.8. கபிலர் விருது

"குறிஞ்சிக்கோர் கபிலர்" எனப் புகழப்பட்ட சங்கத்தமிழ்க் கவிஞர் கபிலரின் பெயரால், பழந்தமிழர், தொன்மை, வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலியன புலப்படும் வகையிலும் தமிழுக்கு அணிசேர்க்கும் வகையிலும் மரபுச்செய்யுள் / கவிதைப் படைப்புகளைப் புனைந்து வழங்கும் தமிழறிஞருக்குக் கபிலர் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான கபிலர் விருது பாவலர் கருமலைத் தமிழாழன் (எ) கி.நரேந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.9. உ.வே.சா. விருது

இன்று அச்சு வடிவில் நாம் பெற்று, படித்து இன்புறுகின்ற பல நூல்களைத் தம் கடின உழைப்பால், ஓலைச்சுவடிகளிலிருந்துதிரட்டித்தந்தவர்தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள், சங்க இலக்கியங்களைத் தமிழ்த்தாயின் திருவடிகளுக்குச் சிலம்பாக அணிவித்து, உலகெங்கும் ஓலைச் சுவடிகளைத் திரட்டி அவை அச்சுப் பதிப்பாக வெளிவருவதற்கு அரும்பணியாற்றியவர். தமிழ்ப்பெருமைகளை விளங்கச் செய்தவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்தம் நெறியில் கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச் சுவடிகள் எனக் கண்டறிந்து, ஆய்ந்து நூலாக்கம் செய்யும் ஆற்றல் மிக்க அறிஞருக்கு, ஆண்டுதோறும் உ.வே.சா. விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான உ.வே.சா. விருது மரு.இரா.கலைக்கோவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.10. கம்பர் விருது

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற கூற்று நாம் அறிந்ததே. கம்பரை பற்றி திறனாய்வு செய்வோர், கம்பர் படைப்புகளை ஆய்வு செய்வோர்

மற்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் உயர் தனிச் செம்மொழி நடையில், காவியங்கள் படைத்து வரும் நற்றமிழ் அறிஞர் ஒருவர்க்கு, ஆண்டுதோறும் 'கம்பர் விருது' வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான கம்பர் விருது திருமதி பாரதி பாஸ்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.11. சொல்லின் செல்வர் விருது

நற்றமிழால் நாடெங்கும் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மக்கள் மனங்கவரும் வகையிலும் தமிழினப் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும் சொற்பொழிவாற்றக்கூடிய ஆற்றலுடன் தன் நாவன்மையால் மக்களிடத்தில் சொற்பொழிவுகள், உரைவீச்சுகள் மூலம் தமிழைக் கொண்டு செல்லும் வகையில் உழைப்பினை ஈந்துவரும் ஒருவருக்கு 'சொல்லின் செல்வர் **விருது' வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான சொல்லின் செல்வர் விருது திரு.சூர்யாசேவியர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதுவரை 9 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.12. முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

உலகெலாம் நம் தாய்மொழியான தமிழ் மொழியைக் கணினியில் கருத்துமொழியாக ஆக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் கணினித் தொழில்நுட்பத்தில், தமிழ் வளர்ச்சிக்காக மிகச்சிறந்த மென்பொருளை உருவாக்கித் தருபவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையிலும் கண்டுபிடிப்புகளைப் பாராட்டும் வகையிலும் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2020–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது முனைவர் வ.தனலட்சுமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.13. உமறுப்புலவர் விருது

தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான 'சீறாப்புராணத்தை'யாத்துள்ள உமறுப்புலவரின் காவியத் தமிழ்த் தொண்டைப் போற்றி அவர்தம் கொள்கை நெறி சார்ந்து, தமிழ் இலக்கியத்திற்குப் பங்களித்து வரும் தமிழறிஞருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது.

**விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன.** 2021–ஆம் ஆண்டிற்கான உமறுப்புலவர் விருது திரு.நா.மம்மது அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.14. ஜி.யு.போப் விருது

அயல்நாட்டு அறிஞரான ஜி.யு.போப் அவர்கள், தமிழ் மொழியைக் கற்று, திருக்குறளின் விழுமியக் கருத்தினால் ஈர்க்கப்பட்டு, அதனைத் தம் மொழியான ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தும், தமிழ் மொழியின்பால் தாம் கொண்டிருந்த தீராக் காதலையும் வெளிப்படுத்திய பெருமகனாவார். அவரது தமிழ்ப் பணியைச் சிறப்பிக்கும் வகையில், அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான ஜி.யு.போப் விருது திரு.அ.சு.பன்னீர்செல்வன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 8 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.15. இளங்கோவடிகள் விருது

இந்தியாவின் இணையிலா தேசியக் காப்பியமாக போற்றப்படும் காப்பியம் சிலப்பதிகாரமாகும். தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்து வரும் ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மையான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றவர்க்கு சிலப்பதிகாரத்தின் புகழை உலகெங்கும் பரவச் செய்கின்ற விதத்தில் உழைப்பைச் செலுத்தி வரும் அறிஞருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான இளங்கோவடிகள் விருது திரு.நெல்லைக் கண்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 7 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.16. தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தனியாகவும், தமிழமைப்பு வைத்தும் 38 மாவட்டங்களில், தமிழுக்குப் பாடுபடும் தமிழ்ச் சான்றோர் பெருமக்களைச் சிறப்புச் செய்யும் வகையில், 'தமிழ்ச் செம்மல் விருது' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில், 'தமிழ்ச் செம்மல் விருது' பெறும் ஒவ்வொருவருக்கும்

**விருதுத் தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும், தகுதியுரையுடன் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டு சிறப்பு செய்யப்படுகிறது.** 2021–ஆம் ஆண்டு வரை 241 தமிழ்ச் சான்றோர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.17. சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் மொழிபெயர்ப்பாளர்களுள் 10 பேரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது' வழங்கப்படுகிறது.விருதாளருக்கு**விருதுத்தொகையாக ரூ.2.00 இலட்சம்,தகுதியுரை,பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டுவரை 60 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.18. 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் விருது

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் ஏழை எளிய தொழிலாளர்களுக்காகவும் பாடுபட்டு தன் படைப்புகளை நூலாக வகுத்தளித்து வாழ்ந்த சிங்காரவேலர் வழியில் தமிழில் அறிவியல் கருத்துகளை நூலாக எழுதுபவர்களிலும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சமத்துவக்

கொள்கைக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த வகையில் பாடுபடும் ஒருவருக்கு, இவ்விருது வழங்கப் பெறுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான சிங்காரவேலர் விருது கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 4 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.19. அயோத்திதாசப் பண்டிதர் விருது

சமத்துவம்,பொதுவுடைமை,தமிழியல்ஆகியவற்றில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயலாற்றும் ஒருவருக்கு அயோத்திதாசப் பண்டிதர் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான அயோத்திதாசப் பண்டிதர் விருது திரு. ஞான, அலாய்சியஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.20. மறைமலையடிகளார் விருது

தனித் தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில், தனித் தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் மறைமலையடிகளார் விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021-ஆம் ஆண்டிற்கான மறைமலையடிகளார் விருது திரு. சுகி.சிவம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 3 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.21. அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது

சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'அருட்பெருஞ்சோதி வள்ளலார்' விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021-ஆம் ஆண்டிற்கான அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் இரா. சஞ்சீவிராயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 2 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.22. தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் விருது

தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் நாளிதழ், வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது', 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வாரஇதழ் விருது', 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது' என்ற பெயரில் சிற்றிதழ்ப் பரிசுகள் வழங்கப்படும். விருதாளர்களுக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம்ஆண்டிற்கானசி.பா.ஆதித்தனார்திங்களிதழ் விருது 'உயிர்மை' திங்களிதழுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 4 இதழாசியர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## 1.3.23. இலக்கிய மாமணி விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்திச் சிறப்பிக்கும் வகையில் 'இலக்கிய மாமணி விருது' உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு இந்த விருது வழங்கப்படும் என

அறிவித்தார்கள். இவ்விருதாளர்களுக்கு **விருதுத் தொகையாக ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரையும் பொன்னாடையும் வழுங்கப்படுகிறது**. 2021–ஆம் ஆண்டிற்குரிய இலக்கிய மாமணி விருதுகள் 18.07.2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு திருநாள் விழாவில் திரு. கு. சின்னப்ப பாரதி, பேராசிரியர் கலியபெருமாள், திரு. கோணங்கி ஆகியோருக்கு வழங்கப்பெற்றன.

## மகளிரைப் போற்றும் தனிநிலை விருதுகள்

### 1.3.24.அம்மா இலக்கிய விருது

பெண்ணிய எழுச்சியை உருவாக்கும் வகையில்,பல தளங்களில் செயற்பட்டுக் கருத்தாழமிக்க படைப்புகளை அளித்துவரும், பெண் படைப்பாளி ஒருவருக்கு, 'அம்மா இலக்கிய விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை** வழங்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டிற்கான அம்மா இலக்கிய விருது முனைவர் மு. சற்குணவதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 6 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.25. காரைக்கால் அம்மையார் விருது

காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய

நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு 'காரைக்கால் அம்மையார்' விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. விருதாளருக்கு **விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன**. 2021–ஆம் ஆண்டிற்கான காரைக்கால் அம்மையார் விருது முனைவர் இரா.திலகவதி சண்முகசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 2 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## இலக்கிய அமைப்புகளைப் போற்றும் தனிவிருது

### 1.3.26. தமிழ்த்தாய் விருது

தமிழ்மொழியின் தொன்மையையும் பண்பாட்டுப் பார்வைகளையும் நாகரிக நெறிகளையும் பரப்பும் வண்ணம் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் தமிழமைப்புகளை நிறுவி தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புக்கு தமிழ்த்தாய் விருது வழங்கப்படுகிறது. விருதுபெறும் தமிழ் அமைப்புக்கு **விருதுத் தொகையாக ரூ.5 இலட்சம் மற்றும் தகுதியுரையுடன் கூடிய பாராட்டுக் கேடயமும் வழங்கப்பட்டு வருகிறது.** 2021–ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருது மலேசியாவிலுள்ள மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இதுவரை 10 அமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

## 1.4. தமிழ் வளர்ச்சித் துறையால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்

### 1.4.1. கனவு இல்லம்

**இந்தியப் பெருநாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் உள்ள எழுத்தாளர்களுக்கு இதுவரையிலும் வழங்கப்படாத சிறப்பினைத் தமிழ் உலகத்திற்கு வழங்கும் பெருமிதமான திட்டம்தான் கனவு இல்லத் திட்டமாகும்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசால் 'கனவு இல்லத் திட்டம்' அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பின்படி, சாகித்திய அகாடமி விருது, ஞானபீட விருது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொல்காப்பியர் விருது, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது மற்றும் உலக அளவிலான நோபல் பரிசு (தமிழ் இலக்கியத்திற்கு) ஆகிய விருதுகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்ற, பெறும் விருதாளர்களுக்குத் தமிழ்நாட்டிற்குள் வீட்டு வசதி வாரியத்தில் உயர்வருவாய்க் குடியிருப்பு வழங்கப்படும். ஒவ்வொரு நிதியாண்டிலும் அதிக அளவாக 10 விருதாளர்கள் அரசால் தெரிவு செய்யப்படுவர். அதன்படி 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டுகளுக்கு 20 விருதாளர்களைப் பயனாளிகளாகத் தேர்வு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### 1.4.2. தீராக்காதல் திருக்குறள்

தீராக் காதல் திருக்குறள் திட்டத்தில் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் வகையில் குறளோவியம் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் சிறப்பாக வரையப்பட்ட ஓவியங்கள் நாட்காட்டியாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும், திருக்குறளில் கூறப்பட்டுள்ளவாழ்வியல்நெறிகளைத்திருவள்ளுவரே நேரில் தோன்றி மாணவனுக்கு எடுத்தியம்பும் வகையில் 'குறள் இனிது' என்ற நாட்டிய நாடகம் 21.12.2022 அன்று சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டது.

### 1.4.3. தமிழ்ப் பரப்புரைக்கழகம்

அயல்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்மொழிம் கல்வியையும் தமிழர் பண்பாட்டையும் வழங்குவதற்கான பல திட்டங்கள் தமிழ்ப் பரப்புரைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்க்கல்வி, 'அகரம் முதல் சிகரம் வரை' என 5 நிலைகளில் (1–12 வகுப்பு) வழங்கப்படவுள்ளது. இணையவழியில் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பண் முறையில் இசைக்கோர்ப்புடன் தேவாரம், திருவாசகப் பாடல்கள், அவை பாடப்பெற்ற தலங்களுடன் காணொலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தன்னார்வலர்களுக்கான தமிழாசிரியர் பட்டயப் பயிற்சி என்ற கல்வித்திட்டத்தை

வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் கற்பிக்க, அயலக நாடுகளுக்கு நேரடி ஆசிரியர் அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 1.4.4. சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

**தனித்துவம் மிக்க நம் தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்கப்படுத்தும் வகையில் 33 வகைப்பாடுகளில் வரப்பெற்ற சிறந்த படைப்புகளை அளித்த நூலாசிரியர்களுக்கும் வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கும் ஆண்டுதோறும் காசோலை/ சான்றிதழ் வழங்கப்படுகின்றன.**

பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூலைத் தெரிவு செய்து அந்நூலை எழுதிய நூலாசிரியர்க்கு ரூ.30,000/– பரிசுத் தொகையுடன் சான்றிதழும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/– பரிசுத் தொகையுடன் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றன.

2017 மற்றும் 2018–ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 29.04.2022–ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாளிலும், 2019–ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 21.02.2023–ஆம் நாளன்று நடைபெற்ற உலகத் தாய்மொழி நாள் விழாவிலும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.5. தமிழ் வளர்ச்சிக்கான நூல்வெளியிட நிதியுதவித் திட்டம் (சிறந்த நூல்கள் / அரிய நூல்கள்/ மொழிபெயர்ப்பு நூல்கள்)

சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும் / அரிய நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும் /பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் / ஆய்வு நூல்களுக்கும் என நூல்களின் சிறப்புத் தன்மையைக் கருத்திற் கொண்டு சிறந்த நூல்களை வெளியிடுவதற்கான நிதியுதவித் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 1966ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது.

எழுதுபொருள் அச்சுத் துறையால் மதிப்பீடு செய்து தெரிவிக்கப்பெறும் தொகை அல்லது உயர் அளவாக ரூ.50,000/- வரை என மேற்குறித்த நூல்களை அச்சிட்டு வெளியிட நிதியுதவி எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 1.4.6. குறள் பரிசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2000ஆம் ஆண்டு முதல் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறள் பரிசு வழங்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவ/ மாணவியர்கள் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் 70

நபர்களுக்கு குறள் பரிசுத் தொகையாகவும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது.

2021-2022–ஆம் ஆண்டு முதல் ஓராண்டுக்கு 70 நபர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டும், 2022–2023–ஆம் ஆண்டு முதல் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் பரிசுத்தொகை ரூ.10,000/–த்திலிருந்து ரூ.15,000/–ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

### 1.4.7. பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மாணவப்பருவத்திலேயே தமிழில் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் கவிதை எழுதும் திறனை வளர்க்கவும் மற்றும் தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் 2003–2004–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்:–**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதற் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |
| மாநில அளவில் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதற் பரிசு | 15,000 |
| | இரண்டாம் பரிசு | 12,000 |
| | மூன்றாம் பரிசு | 10,000 |

**1.4.8. தலைவர்களின் பிறந்த நாளில் ஆறாம் வகுப்பு முதல் கல்லூரி மாணவர்கள் வரை மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துதல்.**

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளில் மாவட்ட அளவில் கல்லூரி,

பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

பேச்சுப்போட்டியில் அரசுப்பள்ளிமாணவர்களுக்காக தனியே சிறப்புப் பரிசு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென தொடர் செலவினமாக ரூ.81,60,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2022–2023–ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத்தொகைகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன.

பேச்சுப்போட்டியில்வெற்றிபெறும்மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம்

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | முதற் பரிசு | 5,000 |
| | இரண்டாம் பரிசு | 3,000 |
| | மூன்றாம் பரிசு | 2,000 |
| அரசுப் பள்ளி மாணவர்கள் 2 பேருக்குச் சிறப்புப் பரிசுத் தொகை | 2x2,000=ரூ.4,000 | |

## 1.4.9. பதினோராம் வகுப்புப் பள்ளி மாணவர்களுக்குத் திறனறி தேர்வு

பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாட் (Olympiad) தேர்வுகளுக்கு பெருமளவில் தயாராகி கலந்து கொள்வதை போன்று தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழில் 'திறனறித் தேர்வு' நடத்தப்பெறுகிறது.

ஆண்டுதோறும் 1500 மாணவர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு மாதம் ரூ.1500/– வீதம் இருபத்திரண்டு திங்கள்களுக்கு வழங்கப்பெறும் என்ற அறிவிப்பிற்கிணங்க, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் முதன்முறையாக 15.10.2022 அன்று திறனறி தேர்வு நடத்தப்பெற்றது. இதனைத் தொடர்ந்து தேர்வு முடிவுகள் 01.12.2022 அன்று www.dge.tn.gov.in என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. ஊக்கத்தொகை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட 1500 மாணாக்கர்களின் விவரப் பட்டியலும் மேற்கண்ட இணையத்தளத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 1500 பள்ளி மாணவர்களுக்கு ரூ.2,47,50,000/– வழங்குவதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு, தமிழ் வளர்ச்சித் துறையால் இத்தொகை வழங்கப்பெற்றது.

### 1.4.10. பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு கையெழுத்துப் போட்டி

பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுள் தமிழ் மொழியை அழகாக எழுதுபவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் கையெழுத்துப் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளது.

இதன்வழியாக பிற மாணவர்களுக்கும் தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்தி பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும். இப்போட்டிகளை நடத்துவதற்காக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.8,36,000/–மும் கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.8,36,000/–மும் என மொத்தம் ரூ.16.72 இலட்சம் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.11. மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை/ அறிவியல் கல்லூரிகள், பொறியியல்/ மருத்துவக் கல்லூரிகளில் "மாணவர் தமிழ் மன்றங்கள்" தோற்றுவித்தல்.

மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, தெரிவு செய்யப்பட்ட 100 கல்லூரிகளில் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ்

சார்ந்த போட்டிகள் நடத்திட ஒரு கல்லூரிக்கு ரூ.5 இலட்சம் என 100 கல்லூரிகளுக்கு வைப்புத் தொகைரு.5கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.இத்தொகையில் கிடைக்கும் வட்டித்தொகையை வைத்து அடுத்த ஆண்டு முதல் மாணவர் மன்றங்களில் தமிழ் சார்ந்த போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். நடப்பு ஆண்டுக்கான செலவினத் தொகை ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வைப்புத் தொகை மற்றும் ஒதுக்கீட்டுத் தொகை என மொத்தம் ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தாறு இலட்சத்தினை கல்லூரிக் கல்வி (76 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.4,07,36,000/, தொழில் நுட்பக் கல்வி (12 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.64,32,000/–, பொறியியல் கல்லூரி (12 கல்லூரிகள்) இயக்ககத்திற்கு ரூ.64,32,000/– என வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.12. அரசு உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளின் தமிழ் மன்றத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி தமிழ் மொழியின் தொன்மையை அறியவும் இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படும் வகையிலும் தமிழுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் ஆண்டுக்கு மூன்று 'தமிழ்க் கூடல்' நடத்திட ஆண்டுதோறும் ஒவ்வொரு

பள்ளிக்கும் ரூ.9000/– வீதம் மொத்தம் ரூ.5,59,62,000/– தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு வழங்கப்பெற்றது.

### 1.4.13. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்கள் 200 பேருக்கு பல்துறை வல்லுநர்களைக் கொண்டு நுட்பமான பயிற்சி பட்டறை ஒரு வார காலம் நடத்தப் பெறுகிறது.

இப்பயிற்சிப் பட்டறையில் முப்பத்தாறு தலைப்புகளில் நுண்மான் நுழைபுலமிக்க தமிழ் சான்றோர்களைக்கொண்டுபயிற்சிப்பட்டறைவாயிலாக இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி பட்டைத்தீட்டிய வைரங்களாக மிளிரச்செய்ய பெறுகிறார்கள்.

2022–2023–ஆம் ஆண்டிற்கு 15.03.2023 முதல் 21.03.2023 வரை ஏழு நாள்கள் மதுரை மூதூரில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் இலக்கியப் பயிற்சிப் பட்டறை சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது.

மாணவர்களுக்காக தமிழ் வளர்ச்சித் துறை நடத்தும் இளந்தமிழர் இலக்கியர் பயிற்சிப் பட்டறையில் ஆழ்ந்த இலக்கியப் பொருண்மைகளை நுட்பமான முறையில் வினாக்களை எழுப்பி உடனுக்குடன் விடைகளை பெறுகின்ற இலக்கிய வினாடி–வினா நிகழச்சி

நடத்தப்பெறுகிறது. இந்நிகழ்ச்சியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதற் பரிசாக ரூ.5000/- வீதம் மூன்று பேருக்கும், இரண்டாம் பரிசாக ரூ.3000/- வீதம் மூன்று பேருக்கும், மூன்றாம் பரிசாக ரூ.2000/- வீதம் மூன்று பேருக்கும் வழங்கப் பெறுகின்றன.

### 1.4.14. இலக்கியக் கூட்டங்கள் நடத்துதல்

புகழ் பெற்ற தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பிறந்த நாளில் அவர்களின் தமிழ் இலக்கியப் பணி, தமிழ்த் தொண்டு, தமிழ்மொழிக்கான பங்களிப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வகையில், ஒரு திங்களுக்கு ஓர் இலக்கியக் கூட்டம் என்ற வகையில் உள்ளூர் இலக்கிய அமைப்புகள் மூலம், ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 12 இலக்கியக் கூட்டங்களும், இதனையொட்டி பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திட ரூ.15,00,000/- நிதி ஒப்பளிப்பும் செய்யப்படுகிறது. இதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூ.1,25,000/- ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

### 1.4.15. நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் எளிய முறையிலும் விலை குறைவாகவும் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலும் தமிழ்நாடு அரசால் தமிழறிஞர்களின்

நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 173 அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள்முதல் பின்வரும் அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | பெயர் | தொகை | நாட்டுடைமை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | சிலம்பொலி சு. செல்லப்பன் | 15 இலட்சம் | 08.12.2021 |
| 2. | முனைவர் தொ.பரமசிவன் | 15 இலட்சம் | |
| 3. | புலவர் இளங்குமரனார் | 15 இலட்சம் | |
| 4. | திரு.முருகேச பாகவதர் | 10 இலட்சம் | |
| 5. | திரு.சங்கரவள்ளி நாயகம் | 10 இலட்சம் | |
| 6. | புலவர் செ.இராசு | 15 இலட்சம் | |
| 7. | பேராசிரியர் க.அன்பழகன் | 25 இலட்சம் | 19.12.2021 |
| 8. | முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் | 25 இலட்சம் | 26.12.2021 |

| வ. எண் | பெயர் | தொகை | நாட்டுடைமை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 9. | திரு. நெல்லை செ.திவான் | 15 இலட்சம் | 21.12.2022 |
| 10. | விடுதலை இராஜேந்திரன் | 15 இலட்சம் | |
| 11. | திரு.நா.மம்மது | 15 இலட்சம் | |
| 12. | திரு. நெல்லை கண்ணன் | 15 இலட்சம் | |
| 13. | திரு.கந்தர்வன் என்கிற நாகலிங்கம் | 10 இலட்சம் | |
| 14. | திரு.சோமலெ | 10 இலட்சம் | |
| 15. | முனைவர் ந.இராசையா | 10 இலட்சம் | |
| 16. | தஞ்சை திரு.பிரகாஷ் | 10 இலட்சம் | |

### 1.4.16. தமிழுக்குத் தொண்டு செய்தோர்க்கு உதவித்தொகை

#### 1.4.16.1. அகவை முதிர்ந்த தமிழறிஞர்/ மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 1978–ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. முதுமைக் காலத்தில் வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் உதவித்தொகை வழங்கப்பெறுகிறது. இந்த உதவித்தொகை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. உதவித்தொகை

பெறும் தமிழறிஞரின் மறைவுக்குப் பின், அவரின் மரபுரிமையருக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திங்கள்தோறும் உதவித்தொகை ரூ.3,500/- மற்றும் மருத்துவப்படி ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,234 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

திங்கள்தோறும் உதவித்தொகை பெற்று வந்த அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மறைவுக்குப் பின் மரபுரிமையருக்கு ரூ.2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- வழங்கப்படுகிறது.

இதுவரை 70 அகவை முதிர்ந்த தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.16.2. எல்லைக் காவலர்கள் / மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

இந்தியா விடுதலை பெற்ற பின்பு 1956-ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அவ்வகையில் சென்னை மாகாணம் தனி மாநிலமாக (தமிழ்நாடு) 01.11.1956-ஆம் நாள் உருவானது. தமிழ்நாட்டில் தமிழர்கள் அதிகம் வாழும் சில பகுதிகள் (கன்னியாகுமரி, திருத்தணி, பீர்மேடு, கூடலூர், தேவிகுளம்) அண்டை மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டபோது மீண்டும் அப்பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

அவ்வாறான எல்லைப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்ற தியாகிகளுக்கு தமிழ்நாடு அரசு, அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக திங்கள்தோறும் ரூ.5500/– மற்றும் மருத்துவப்படி ரூ.500/– வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை எல்லைக் காவலர்கள் 404 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

எல்லைப்போராட்டத்தில்பங்கேற்றுஉதவித்தொகை பெற்று வந்த எல்லைக்காவலரின் மறைவிற்குப் பின் அவருடைய மரபுரிமையருக்குத் திங்கள்தோறும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக ரூ.3000/– மற்றும் மருத்துவப்படி ரூ.500/– வழங்கப்படுகிறது.

இதுவரை எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 267 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.16.3. தமிழறிஞர்/மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழ், தமிழ்ப் பண்பாடு, மொழி ஆகியவற்றை பாதுகாக்க தொண்டு செய்தவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக திங்கள்தோறும் ரூ.4500/– மற்றும் மருத்துவப் படி ரூ.500/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1105 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

திங்கள்தோறும் உதவித்தொகை பெற்று வந்த தமிழறிஞர்கள் மறைவுக்குப்பின், அவர்களின் மரபுரிமையர்க்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவ்வகையில் திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.2500/–மற்றும்மருத்துவப்படி ரூ.500/–வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 999 பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.16.4. தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்களுக்கு ஈமச் சடங்குத் தொகை

தமிழறிஞர்கள்/எல்லைக்காவலர்கள்இறப்பின்போது ஏற்படும் ஈமச்சடங்கு செலவுக்காக அவர்களின் மரபுரிமையரிடம் ஈமச்சடங்குத் தொகையாக ரூ.5000/– வழங்கப்படுகிறது. 2021–2022–ஆம் ஆண்டு வரை 41 பேருக்கும் 2022–2023–ஆம் ஆண்டில் புதிதாக 28 பேர் என மொத்தம் 69 பேருக்கு ஈமச்சடங்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 1.5. தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நிதியுதவி வழங்கப்பெறும் திட்டங்கள்

### 1.5.1. சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து எளிமைப் பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ்ச் செவ்வியல் 41 இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல்

சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து எளிமை பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ்ச் செவ்வியல் 41 இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து எளிய உரைகளுடனான தொகுப்பு நூலாக உருவாக்கவும் இதற்குரிய வல்லுநர் குழுச் செலவினப் பணிக்காகவும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு 2021−2022−ஆம் ஆண்டில் தொடராச் செலவினமாக ரூ.10,00,000/− வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பத்துப்பாட்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் உருவாக்கப்பெறும் சங்க இலக்கியக் தொகுப்பு நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக அச்சிட்டு தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு வெளியீடாக வெளியிட அனுமதி அளித்து இப்பணிக்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 2021−2022−ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ரூ.10,00,000/− நிதி வழங்கப்படுகிறது.

### 1.5.2. தந்தை பெரியாரின் சிந்தனைகள் – தொகுப்பு நூல் நிதியுதவி

தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, தமிழ் மற்றும் 21 இந்திய, உலக மொழிகளில்

அச்சு நூல்களாகவும் மின்னூல் பதிப்புகளாகவும் ரூபாய் ஐந்து கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வாயிலாக வெளியிட நிருவாக அனுமதி அளித்தும், 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.29,05,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டும் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.5.3. அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம்

அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம் நடத்திடவும், மண்டல அளவிலும் மாநில அளவிலும், தமிழில் பொறியியல், தொழில்நுட்பப் போட்டிகளையும் மற்றும் அறிவியல் போட்டிகளையும் நடத்திட ரூ.16 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டது. முதற்கட்டமாக பயிலரங்கம் நடத்திட ரூபாய் ஆறு இலட்சம் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மைய இயக்குநருக்கு வழங்கப்பட்டது.

## 1.6. நல்கைகள்

### 1.6.1. தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை உலகத்

தமிழ்ச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் தமிழ் பணிகளில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து சீரிய முறையில் செயல்படவும், அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம், பிற திட்ட பணிகளுக்காகவும் ஆண்டுதோறும் நல்கைகள் வழங்கப் பெறுகின்றன.

### 1.6.2. பிற மாநில பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்

இந்தியாவிலுள்ள பிற மாநில பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம், அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள குவகாத்தி பல்கலைக்கழகம், உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள வாரணாசி இந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் 2021–2022–ஆம் ஆண்டில் தமிழ் பயின்ற மாணவர்களுக்கு 2023–ஆம் ஆண்டில் கல்வி உதவித்தொகையாக ரூ.3,27,900/– வழங்கப்பட்டுள்ளது.

### 1.6.3. பிற மாநில பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

தமிழ்நாடு அரசின் நல்கையால் பிற மாநில பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் 2008–ஆம் ஆண்டு ஒரு பேராசிரியர், ஒரு இணைப்பேராசிரியர், இரண்டு உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நல்கை வழங்கப்பட்டு வருகிறது. குவகாத்தி பல்கலைக்கழகம், வாரணாசி இந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறைகளில், முறையே ஒரு உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு அவற்றிற்கு 2019–2020–ஆம் ஆண்டில் முறையே ரூ.1,42,488/– (குவகாத்தி), ரூ.1,55,360/– (வாரணாசி) நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

### 1.6.4. குவகாத்தி பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு கணினி மற்றும் நூலகம் அமைத்திட நிதியுதவி

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் குவகாத்தி பல்கலைக்கழக தமிழ்த் துறையில் ரூ.2.90 இலட்சம் செலவில் தமிழ்க் கணினியும், தமிழ் நூல்கள் வைக்க நிலைப் பேழையும் வழங்கப்பட்டு தமிழ் நூலகமும் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

## 1.6.5. வாரணாசி – பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக் கூடம்

தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் எளிதாகவும் விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் 2019–2020–ஆம் ஆண்டில் வாரணாசி பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்குவதற்கு ரூ.8,00,000/– வழங்கப்பட்டு, மொழி ஆய்வுக்கூடம் செயற்பட்டு வருகிறது.

## 1.6.6. பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள்/ சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் அம்மாநிலங்களில் தமிழ்ப் பண்பாட்டை பரப்பிடும் வகையிலும் தமிழ் அமைப்பு/சங்கங்கள் நிறுவி செயற்படுத்தி வருகின்றனர். அவர்களின் தமிழ் உணர்வை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூரு தமிழ்ச் சங்கம், நவி மும்பைத் தமிழ்ச் சங்கம், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம், புதுதில்லி தமிழ்ச் சங்கம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

### 1.6.7. பிற மாநிலங்கள்/அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுதல்

பிறமாநிலங்கள்,அயல்நாட்டுபல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு அரசால் தமிழ் இருக்கை அமைத்து தமிழை பாரெங்கும் பரப்பிடும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் இருக்கை அமைப்பதன் மூலம் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு போன்றவை தொடர்பான ஆய்வுகள் மேம்படும். அங்குள்ள நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அரிய நூல்களை பதிப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியல் துறை 1963–இல் தொடங்கப்பட்டது. நிதிப் பற்றாக்குறையால் செப்டம்பர் 2020–இல் தமிழ்த் துறையை மூடுவதாக பல்கலைக்கழக நிருவாகம் அறிவித்தது. தற்போது தமிழ்த் துறை தொடர்ந்து தொய்வின்றிச் செயற்பட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி நிதியுதவி வழங்கப்படுமென 07.07.2021–ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு,12.07.2021–ஆம் நாளில் தொகையும் வழங்கப்பட்டது.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் 'தமிழ் இலக்கியவியல்' என்னும் தனித்துறை உருவாக்கிடும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.12.2022–ஆம் நாளன்று ரூ.5 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹுஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் கூடுதல் நிதியுதவியாக 15.11.2022–ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3 இலட்சம் அமெரிக்க டாலருக்கு நிகராக ரூ.2,44,41,750/– வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் கீழ்க்காணும் நிறுவனம்/ பல்கலைக்கழகங்களில், தமிழ் ஆய்விருக்கை/இருக்கைகள் நிறுவப்பட்டுள்ள விவரம்:–**

| வ. எண் | நிறுவனம் | ஆண்டு | வைப்புத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| அயல்நாடு/இந்தியாவில் பிற மாநிலம்/தமிழ்நாடு | | | |
| 1. | ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி | 2000, 2003 | 50,00,000/– |
| 2. | உத்கல் பண்பாட்டு பல்கலைக்கழகம், ஒடிசா | 1999 | 10,00,000/– |
| 3. | இந்து பல்கலைக்கழகம், வாரணாசி | 1972–1977 | 3,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | தொல்காப்பியர் ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2013 | 50,00,000/- |
| 5. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2018 | 1,00,00,000/- |
| 6. | இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 2019 | 1,00,00,000/- |
| 7. | ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி. (தமிழ் இலக்கியவியல் என்னும் தனித்துறை உருவாக்கிட) | 2022 | 5,00,00,000/- |
| **அயல்நாடு** | | | |
| 8. | மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியஸ் | 2010 | 1,00,00,000/- |
| 9. | ஹார்வர்டு பல்கலைக்கழகம், அமெரிக்கா | 2017 | 10,00,00,000/- |
| 10. | ஹூஸ்டன் பல்கலைக்கழகம்,அமெரிக்கா | 2019 | 1,00,00,000/- |
| 10. | டொராண்டோ பல்கலைக்கழகம், கனடா | 2021 | 1,00,00,000/- |
| 12. | கொலோன் பல்கலைக்கழகம், ஜெர்மனி | 2021 | 1,25,00,000/- |
| 13. | ஹூஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா | 2022 | 2,44,41,750/- |

## 1.6.8. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தம் சந்ததியினர் மொழி வரலாறு குறித்து அறிந்துகொள்ளும் வகையில், அங்குள்ள நூலகங்களுக்கு தமிழ் நூல்கள், நிலைப்பேழைகள் வழங்குதல்

புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அவர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கும், அவர்களின் சந்ததியினர் தமிழ்மொழியை மறக்காமல் பயின்று அறிந்துகொள்ள ஏதுவாகவும்,தமிழ்நாடு அரசு அவர்களுக்கு அடிப்படைத் தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழ் பண்பாடு மற்றும் மொழி வரலாறு குறித்த நூல்கள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் இந்த ஆண்டு ஜெர்மனியில் உள்ள முன்சென் தமிழ்ச் சங்கத்திற்கும்,பிரான்சில் உள்ள பாரிசு நகரில் செயற்பட்டு வரும் பாரிசு பன்னாட்டு உயர் கல்வி நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் நூல்கள் மற்றும் நிலைப்பேழைகள் வழங்கப்பட்டுள்ளன.

## இயல் - 2

## மொழிபெயர்ப்புப் பிரிவு

வேங்கட மலைக்கு வடமேற்கு நிலப்பரப்பைக் கடந்து விட்டாலே 'மொழிபெயர் தேயம்' தொடங்கி விடுகிறது என்று சங்ககாலப் புலவர் மாமூலனார் குறிப்பிடுகிறார்.

*பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்*
*மொழிபெயர்தேயத்தர் ஆயினும் நல்குவர்*

என்ற அகநானூற்றுப் பாடலின் (எண். 211) அடிப்படையில் 'மொழிபெயர்ப்பு' என்ற சொல் உருவாகி இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

ஒரு மொழியின் வளமைக்கும், வளர்ச்சிக்கும் மொழியாக்கம் மிகவும் இன்றியமையாதது என்பதை,

***பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்***
***தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்***

***சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்***
***செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்***

என்னும் மகாகவியின் வைரவரிகள் உலகிற்கு உணர்த்துகின்றன.

மொழிபெயர்ப்பு அறிவு சார்ந்த பயிற்சி மட்டுமன்று, ஒரு மொழியில் ஏற்படும் புதுமைகளை வேற்று மொழிக்குக் கொண்டுவரும் அரும்பெருங் கலையே

மொழிபெயர்ப்புக்கலை ஆகும்.

மொழிபெயர்ப்பின்றி அணுவும் அசையாது என்று சொல்லுமளவுக்கு, அலுவலக நடைமுறைகளில் மிகவும் இன்றியமையாத அங்கமாக மொழிபெயர்ப்பு விளங்கி வருகிறது.

இவ்வகையில், தலைமைச் செயலகத் துறைகளின் அலுவல்சார் மொழியாக்கப் பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் நிறைவேற்றி தலைமைச் செயலகத் துறைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு உற்ற துணையாகத் தோள் கொடுத்து வருகிறது தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு. இப்பிரிவில் தமிழ், ஆங்கிலம்மட்டுமல்லாதுமலையாளம்,தெலுங்குமற்றும் இந்திமொழிகளில்வரப்பெறும்கோப்புகள்/கடிதங்களின் அலுவல்சார் மொழிபெயர்ப்புப் பணிகளனைத்தையும் கணினிவழித் தட்டச்சு செய்து உரிய துறைகளுக்கு அனுப்பி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## மொழியாக்கப் பொருண்மைகள்

- ❖ தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கைகள்
- ❖ சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள்
- ❖ மாண்புமிகு ஆளுநரின் உரை
- ❖ நிதிநிலை அறிக்கை உரை

- ❖ நிதித்துறை வெள்ளையறிக்கை
- ❖ அரசு செய்தி வெளியீடுகள்
- ❖ பல்வேறு விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள்
- ❖ மாநில தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை
- ❖ தேர்தல் கையேடுகள்
- ❖ கொள்கை விளக்கக் குறிப்புகள்
- ❖ பொதுக் கணக்குக் குழு / பொது நிறுவனங்கள் குழுவின் தணிக்கை அறிக்கைகள் போன்றவை

## ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

தலைமைச் செயலகத் துறைகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, தமிழாக்கம் வேண்டி மொழிபெயர்ப்புப் பிரிவுக்கு அனுப்பப்படும் அரசாணைகள் உடனுக்குடன் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வகையில், தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்கும் உறுதுணையாய் மொழிபெயர்ப்புப் பிரிவு தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

## இயல் - 3

# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

### 3.1. தோற்றம்:

***"தனிமைச் சுவையுடைய சொல்லை – எங்கள்***
***தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை!"***

– பாவேந்தர் பாரதிதாசன்

இலக்கிய – இலக்கண வளங்கள் நிறைந்த, பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் இன்றளவும் உயிர்ப்புடன் இருக்கின்ற செந்தமிழ் மொழிக்குச் "செம்மொழித் தகுதி" கிடைப்பதற்கு முகாமையான பங்காற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மொழிப்பற்றின் விளைவாக 1974–ஆம் ஆண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தொடங்கப்பெற்றது.

முத்தமிழறிஞரின் வழியில், தமிழ்மொழி மற்றும் தமிழர்நலனுக்காகநல்லபலதிட்டங்களைசெயற்படுத்தி வரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "தமிழ்தொன்மையானமொழிஎன்பதுஉலகம்முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்களும், இனவியல் அறிஞர்களும், தொல்பொருள் ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்ட மாபெரும் உண்மை இது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பாதுகாத்தல், கலைச்சொல் வளத்தை பெருக்குதல் ஆகிய இலக்கோடு மொழிக்காப்புப் பணியை இவ்வியக்ககம் செய்துவருகிறது.

## 3.2. நோக்கம்:

தொன்மைவாய்ந்ததமிழ்மொழியின்சொல்வளத்தை அகராதிகளில் பதிந்து, பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு வழங்கி வருவதோடு, காலத்திற்கேற்ப பலதுறை சார்ந்த தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கி வருகிறது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம். மொழி காலந்தோறும் வளர்நிலைக்கு உட்பட்டது என்பதனால், மொழி உள்ளவரை அகராதிப் பணியும், மொழிபெயர்ப்பு உயிர்ப்புடன் அமைய கலைச்சொல்லாக்கமும் இன்றியமையாதது என்பதனால், சொல்லாக்கப்பணியும் இடையறாது நடைபெறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## 3.3. இயக்ககச் செயற்பாடுகள்

### 3.3.1. வெளியீடுகள் :

இவ்வியக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 தொகுதிகளை வெளியிட்டு, அவற்றை எண்மியமாக்கித் (Digitize) தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வலைத்தளத்தில் பதிவேற்றம்

செய்துள்ளது. சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சுருக்கப் பதிப்பு, தமிழ் வினைச்சொல் அகரமுதலி ஆகியனவும் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், 1 முதல் 5–ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன் கூடிய 'நற்றமிழ் அறிவோம்' என்னும் தூய தமிழ் அகரமுதலி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 'வேர்ச்சொல் சுவடி' ஆகியன அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

நடைமுறைத்தமிழ்அகரமுதலி,மாணவர்இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, தமிழ்–தமிழ் பையடக்க அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி, தமிழ் மரபுத்தொடர் அகராதி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. ஆட்சிச்சொல்லகராதி திருந்திய பதிப்பு, துறைவாரியான ஆட்சிச்சொல்லகராதி குறுநூல் ஆகியவை அச்சில் உள்ளன. இவ்வியக்ககப் படைப்புகள் அனைத்தும் விக்சனரி பொதுத்தளம், சொற்குவை.காம் (sorkuvai.com) எனும் இவ்வியக்கக வலைத்தளத்தின் வழியாக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.3.2. தமிழ்க் கலைக்கழகம்

மக்களின் பயன்பாட்டிலும், சமூக ஊடகங்களிலும் உள்ள பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான தமிழ்க் கலைச்சொற்களை இயக்ககத்தின் வழியே உருவாக்கி, வல்லுநர்

குழுவைக் கொண்டு செம்மைப்படுத்திச் சொற்குவை வலைத்தளத்தில் வெளியிடுவதுடன், இப்புதிய தமிழ்க் கலைச்சொற்கள்அரசாணைவாயிலாகவெளியிடப்பட்டு வருகின்றன. திங்களுக்கு இரண்டு வல்லுநர்குழுக் கூட்டங்கள் என்ற வகையில் தொடர்ந்து தமிழ்க் கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது.

தமிழ்க் கலைக்கழகச் சொற்கள் தேவையான இடங்களில் படங்களுடன் இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைத்தளத்தின் (sorkuvai.com) வழியாகவும், முகநூல் (Facebook), புலனம் (Whatsapp), சுட்டுரை (Twitter), படவரி (Instagram), சொல்வயல் திங்கள் மின்னிதழ் வாயிலாகவும் பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை சொல்லாய்வு வல்லுநர்களால், 42,926 சொற்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

### 3.3.3. சொற்குவை வலைத்தளம் (www.sorkuvai.com)

***"உலகுக்குத் தமிழ்மொழியின்***
***உயர்வுதனைக் காட்டுவது சொற்பெருக்காம்!"***

– பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஒரே தளத்தின்கீழ் ஒருங்கு தொகுத்து உலக மக்களின்

பயன்பாட்டுக்கு வழங்கும் நோக்கில் சொற்குவை வலைத்தளம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சொற்குவை வலைத்தளத்தில் (sorkuvai.com) தற்போது வரை 9,57,399 பல துறை சார்ந்த தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம் செய்யப் பெற்றுள்ளன. இயக்ககத்தின் பதிப்பாசிரியர்,உதவிப்பதிப்பாசிரியர்,தொகுப்பாளர்களால் வடிவமைக்கப்பட்டு, தமிழ்க் கலைக்கழகத்தில் ஏற்பு பெறும் கலைச்சொற்கள், இவ்வியக்ககம் நடத்தும் துறைசார் வல்லுநர் குழுக் கூட்டங்கள், சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம், களப்பணி போன்றவற்றின் மூலம் கிடைக்கும் கலைச்சொற்கள், இணையவழி பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம் வழியாக தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் உள்ளிட்டோர் வழங்கும் பல்வேறு துறை சார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்கள் ஆகியவை வல்லுநர் குழுவின் ஏற்புக்குப்பின் சொற்குவைவலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

### 3.3.4. தமிழ் அகராதியியல் நாள் விழா

"தமிழ் அகராதியியலின் தந்தை" என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8–ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாளாக' கொண்டாடப்பட்டும் மற்றும் இரண்டு நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கமும் நடத்தப்படுகிறது. இதற்கென ஆண்டுதோறும் தொடர்

செலவினமாக ரூ.10இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்விழாவில், தூய தமிழிலேயே பேசுகின்ற மூவருக்கு தூய தமிழ்ப்பற்றாளர் சான்றிதழுடன் ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத்தொகையும், பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூ.10,000/– மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/– மும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய 'அகராதி ஆய்வு மலர்' அச்சிடப்பட்டு விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இவ்விழாவில், இவ்வியக்ககம் சார்பில் 5 வகையான விருதுகள், 43 பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

## 3.4. விருதுகள்

### (1) தேவநேயப் பாவாணர் விருது

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும் தகுதி வாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு தேவநேயப் பாவாணர் விருதும், விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும் 1 சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் மற்றும் பொன்னாடை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டுக்கான தேவநேயப்பாவாணர்விருதினை16.01.2023–ஆம்நாள் நடைபெற்ற விழாவில், முனைவர் இரா.மதிவாணன் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தம் பொற்கரங்களால் வழங்கிச் சிறப்பித்தார்.

## (2) வீரமாமுனிவர் விருது

அகராதித்துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்த, தகுதி வாய்ந்த அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு வீரமாமுனிவர் விருது வழங்கப்பட்டு வருகின்றது. விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும் 1 சவரன் தங்கப் பதக்கமும் பொன்னாடை தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

## (3) தூயதமிழ்ப் பற்றாளர் விருது

அன்றாட நடைமுறையில் பிறமொழிக் கலப்பின்றி தூயதமிழ் பேசுவோரை ஊக்கப்படுத்த மாவட்டந்தோறும் ஒருவருக்கு 'தூயதமிழ்ப் பற்றாளர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.20,000/–மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

## (4) தூயதமிழ் ஊடகவிருது

தூயதமிழைப்பயன்படுத்தும்காட்சிஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஒரு காட்சி ஊடகம் மற்றும் ஒரு அச்சு ஊடகத்திற்கு 'தூயதமிழ் ஊடக விருதும்', விருதுத் தொகையாக ரூ.50,000/–மும் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

### (5) நற்றமிழ்ப் பாவலர் விருது

தம் கவியாக்கங்களில் பிறமொழியின்றி தூயதமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் கவிஞர்களுள் மரபுக் கவிஞர் ஒருவருக்கும், புதுக்கவிஞர் ஒருவருக்கும் 'நற்றமிழ்ப் பாவலர் விருதும்', விருதுத் தொகையாக வகை ஒன்றுக்கு ரூ.50,000/-மும், தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

## 3.5. 'சொல் வயல்' திங்கள் மின்னிதழ்

சொல்லாய்வுகள், துறைசார் கலைச்சொற்கள், கலைச்சொல்லாக்கம், அகராதியியல், மொழியியல் சார்ந்த கருத்துக்கள், தமிழ்மொழி குறித்த கருத்தாக்கங்கள், இயக்ககச் செயற்பாடுகள் உள்ளிட்ட செய்திகளைத் தாங்கி "சொல்வயல்" மின்னிதழ் 'சொற்குவை வலைத்தளத்தில்' (sorkuvai.com) 2020-சூன் திங்களிலிருந்து திங்கள்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. 2023 மார்ச்சு வரை 34 இதழ்கள் வெளிவந்துள்ளன.

## 3.6. சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்

கல்லூரி மாணவர்களிடையே கலைச்சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து, அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்கப்படுத்தும் வகையில்

'சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 26 கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டதில் இத்திட்டத்தில் 8,200–க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

## 3.7. சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம்

சொற்குவையை வளப்படுத்தும் வகையில், பலதுறைகளில் காலத்திற்கேற்ப புழங்கிவரும் கலைச்சொற்களை தொகுத்து சொற்குவையில் சேர்க்கும் வண்ணம் மூன்று திங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் ஆண்டுக்கு நான்குமுறை துறைசார் வல்லுநர் குழுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், 15.07.2022 அன்று சேலத்தில் நெசவுத்துறை மற்றும் பட்டுவளர்ச்சித் துறையிலும், 09.08.2022 அன்று சென்னையில் கால்நடைத்துறையிலும், 15.09.2022 அன்று கோயம்புத்தூரில்வேளாண்மைத்துறையிலும்,துறைசார் வல்லுநர் குழுக்கூட்டங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 3,591 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

## 3.8. வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி:

தமிழ்நாட்டின் பகுதிகளை சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கோவை

என 6 மண்டிலங்களாக பகுத்து, 6 மண்டிலங்களுக்கும் தனித்தனியே ஒருங்கிணைப்பாளர்கள் அமர்த்தப்பட்டு, அப்பகுதிகளுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து அப்பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள், பொருளுடன் தொகுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு ரூ.8,25,400/- நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2023 பிப்ரவரி திங்கள் வரை 18,369 சொற்கள் திரட்டப்பெற்றுள்ளன. 2023-ஆம் ஆண்டிற்குள் இவ்வகராதி வெளியிடப்படவுள்ளது.

### 3.9. அரசுத் துறைகளில் புதிய கலைச்சொற்கள்

*"செயல் செய்வாய் தமிழுக்குத்*
*துறைதோறும் துறைதோறும் சீறிவந்தே"*

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அரசுத் துறைகளில் புழங்கும் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்க்கலைச்சொற்களை வடிவமைத்துப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதென்பது, ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கு பெரிதும் உதவியாக அமையும்.

அந்த வகையில், நீர்வளத்துறை, கட்டடம் (ம) பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலகம், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை, சென்னைக் குடிநீர் (ம) வடிகால் வாரியம், தோட்டக்கலை (ம) பயிர்கள் துறை,

வேலைவாய்ப்பு (ம) பயிற்சித் துறை, எழுதுபொருள் (ம) அச்சுத் துறை, பழங்குடியினர் நல இயக்குநரகம், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், போக்குவரத்துத் துறை ஆணையரகம், நிலச்சீர்திருத்தத் துறை, நகர்ப்புற நில உச்சவரம்பு (ம) நகர்ப்புற நிலவரி ஆணையரகம், ஆதித் திராவிடர் நல இயக்குநரகம், வணிகவரித் துறை, நில அளவைத் துறை ஆகிய அரசுத் துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்து 5,661 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

## 3.10. பன்மொழி அகராதி – தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலி

தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட திராவிட மொழிகளிலும், ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட பிறமொழிகளிலும், தமிழ்மொழியை இலகுவாகக் கற்கும் வகையில் அந்தந்த மொழிகளில் புலமை வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு பாடநூலும், பன்மொழி அகராதியும் உள்ளடக்கிய, தமிழ் கற்கும் திறன்மிகு குறுஞ்செயலி உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டு 2023–ஆம் ஆண்டுக்குள் பன்மொழி அகராதியும், தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலியும் மக்களின் பயன்பாட்டுக்கு வெளியிடப்படவுள்ளன. இத்திட்டத்திற்கென

2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.33,56,000/– நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 3.11. சொல் தொகுப்பி

2022–2023–ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் மற்றும் அயல்நாடுவாழ் தமிழர்கள் உள்ளிட்ட அனைவரும் இணையதளம் வழியாக ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை தாமே உள்ளீடு செய்யும் வகையில், "கலைச்சொல்தொகுப்பி"உருவாக்குவதற்கானபணிகள் நடைபெற்று வருகின்றன. 2023–ஆம் ஆண்டுக்குள் "சொல் தொகுப்பி" உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.10,00,000/– நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 3.12. துறைசார் கலைச்சொல் அகராதிகள்

"2022–2023–ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பின்போது, மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய கலைச்சொற்களை உருவாக்கம் செய்வதற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள்

கழகத்துடன் இணைந்து, துறைசார் வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பிற்கிணங்க, நடப்பாண்டில்முதற்கட்டமாக 'மருத்துவக்கலைச்சொல் அகராதி' உருவாக்க பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம்நிதியாண்டிற்கு ரூ.12,15,490/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வகராதிக்கான சொற்களை திரட்டுவது தொடர்பாக சென்னை மற்றும் தஞ்சாவூரில் மருத்துவக் கலைச்சொல் அகராதி சீராய்வுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன. 04.03.2023 அன்று சென்னையில் 30 மருத்துவ அறிஞர்கள் பங்கேற்ற மருத்துவக் கலைச்சொல் அகராதித் தொகுப்பு திட்டப் பயிலரங்கம் நடத்தப்பெற்றது. கோயம்புத்தூர் பூ.சா.கோ. மருத்துவக் கல்லூரி (ம) மருத்துவ நிறுவனத்திலும், அரசுத் தேனி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை அரசு மருத்துவமனை (ம) மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கலைச்சொல் அகராதித் தொகுப்பு திட்டக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. 2023 மார்ச்சு முடிய 27,018 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மருத்துவக் கலைச்சொல்லகராதி அச்சிட்டு வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.13. மக்களை நோக்கி அகராதிகள்

சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடப்பெறும் என்ற 2021–2022–ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, இவ்வியக்கக வெளியீடுகள் விக்கிப்பீடியா,விக்கிமூலத்தில்பதிவேற்றம்செய்யப்பட்டு வருகின்றன.

ஒன்றியஅரசின் "விகாசுபீடியா"(vikaspedia)இணைய தளத்தில், தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் "சொற்குவை" வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் "சொல்வயல்" மின்னிதழில் இடம்பெறும் துறைசார் கலைச்சொற்கள் எடுத்தாளப்பட்டு, பொதுத்தளப் பயன்பாட்டுப் பரவலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

## 3.14. இணையவழிப் பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்

***"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்***
***செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!***

என்ற மகாகவி பாரதியாரின் வாய்மொழிக்கேற்ப புறநிலையில் உள்ள பலதுறை அறிஞர்களிடமிருந்தும் தமிழ்க் கலைச்சொற்களை பெற்று சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் நோக்கில்

01.10.2021–ஆம் நாளிலிருந்து வெள்ளிதோறும் இணையவழி பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்நடத்தப்பெற்றுவருகிறது.இதுவரையிலான அமர்வுகளில், பாரிஸ், நார்வே, மலேசியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, தாய்லாந்து, மொரிசியஸ், இலங்கை, நியூசிலாந்து, கொரியா, ஜப்பான், துபாய், ஓமன், குவைத், தைவான்,பின்லாந்து,மியான்மர்,அயர்லாந்து,ஆங்காங், ஸ்வீடன்,சவுதிஅரேபியாஉள்ளிட்டபல்வேறுநாடுகளைச் சேர்ந்த 219 அயலக அறிஞர்களும், தமிழ்நாடு உட்பட 143 உள்நாட்டு அறிஞர்களும் பங்கேற்று 7,692 தமிழ்க் கலைச்சொற்களை வழங்கியுள்ளனர். வல்லுநர்களின் ஆய்வுக்குப் பின் அவை சொற்குவையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வமர்வுகளில் 4,500–க்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாக பங்கேற்றும், கலைச்சொல்லாக்கங்கள் குறித்த தங்கள் கருத்துக்களை தெரிவித்தும் பயன்பெற்றுள்ளனர். அமர்வில் பங்கேற்கும் அறிஞர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் இயக்ககத்தின் சார்பில் மின்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

***குலமெனப் படுவதும் தமிழே!கோவெனப் படுவதும் தமிழே!நலமெனப் படுவதும் தமிழே!நாடெனப் படுவதும் தமிழே!"***

என்ற மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் தமிழ் முழக்கத்தை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செம்மாந்த நெறியாளுகையின்கீழ் தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழ்மொழிக்கான ஆக்கப் பணியில் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

## இயல்–4

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## 4.1. தோற்றம்

சென்னையில் 1968–ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரெஞ்சு மொழிக் கலைக்கழகத்தைப் போன்று, தமிழ் உயராய்வுக்கென்று ஒரு நிறுவனத்தை சென்னையில் தொடங்க வேண்டும் எனக் கூறியதற்கிணங்க, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970–ஆம் ஆண்டு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டது.

## 4.2. நோக்கம்

- ❖ ஆய்வுக்கு உகந்த கல்விச் சூழலை உருவாக்குதல்;
- ❖ இன்றையதேவைக்கேற்பஆராய்ச்சியாளர்களுக்கு பயிற்சியளித்தல்;
- ❖ பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் தமிழாய்வுத் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல்;

- ❖ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் ஆகியோருடன் இணைந்து உயர் தமிழாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ ·உயராய்வு நூலகத்தை மேம்படுத்திப் பயன் அடைதல்.

## 4.3. ஆளுகைக் குழு

தலைவர் – மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு அமைச்சர் அவர்கள்

துணைத் தலைவர்கள் – அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம்மற்றும்தமிழ்ப்பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்.

உறுப்பினர்கள் – நிதித்துறை செயலாளர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற (ஐ.ஏ.டி.ஆர்.) பிரதிநிதி ஒருவர், மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர்–செயலராக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஆளுகைக் குழுவின் வழிகாட்டுதலோடு தன்னாட்சி நிறுவனமாக இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

### 4.4. நிறுவன அமைப்பு முறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வி மற்றும் நிருவாகம் என இருவேறு பிரிவுகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை செவ்வனே மேற்கொள்ள இயக்குநர் தலைமையில் நிருவாகம் மற்றும் கல்விப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 4.5. புலங்கள்

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம்
4. அயல்நாட்டுத் தமிழர் புலம்

ஆகிய புலங்கள் செயற்பட்டு வருகின்றன.

### நிகழ்த்தப்படும் உயர் தமிழாய்வுப் பணிகள்

❖ ·தமிழ்மொழி இலக்கணம், தமிழ் இலக்கியம், சமுதாய மொழி இலக்கண ஆய்வுகளை நிகழ்த்துதல் மற்றும் மொழி கற்பித்தல்;

❖ ·கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்;

- ❖ நிறுவனத்திலுள்ள பதிப்பிக்கப்படாத சுவடிகளைப் படியெடுத்து ஆய்வுப் பதிப்புகளாகக் கொண்டு வருதல்;
- ❖ பிற நிறுவனங்களோடு இணைந்து தமிழியல் ஆய்வை வளப்படுத்துதல்;
- ❖ தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
- ❖ பழங்குடிகளின் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
- ❖ அயல்நாட்டுத்தமிழறிஞர்கள்பற்றியதகவல்களை கொண்டஆளுமைதரவுதளத்தைஉருவாக்குதல்;
- ❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
- ❖ புகழ்பெற்ற உலக இலக்கியங்களை தமிழ்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுதல்;

## 4.6. கல்விப் பணிகள்

- ❖ ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 247 மாணவர்கள்முனைவர்பட்டமும்,388மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

- 2022–2023–ஆம் ஆண்டில் 34 மாணவர்கள் முனைவர் பட்ட வகுப்பிலும், 9 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பிலும் பயின்று வருகின்றனர்.

- தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் மாணவர்களுள் தெரிவின் அடிப்படையில் 8 மாணவர்களுக்கு ரூ.5,000/– வீதம் திங்கள் ஆய்வு உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு ஆகியன தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

- 2022–2023–ஆம் ஆண்டு முதுகலை வகுப்பில் 20 மாணவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலை வகுப்பில் 14 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

- தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு தமிழ் முதுகலை பயிலும் 15 முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் 15 இரண்டாம் ஆண்டு மாணவர்கள் என 30 மாணவர்களுக்கு திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ.2,000/– வீதம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

❖ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலத்தின் சார்பில், தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பும், திருக்குறள் ஓவியக் காட்சிக்கூட ஒருங்கிணைப்புடன் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஆகிய ஓராண்டுப் பட்டய வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை சுவடிப் பட்டய வகுப்பில் 116 மாணவர்களும், கல்வெட்டியல் பட்டய வகுப்பில் 841 மாணவர்களும் பயின்றுள்ளனர். 2022–2023–ஆம் ஆண்டில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு ஆகியவற்றில் 360 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் பயிலும் மாணவர்களுள் தெரிவு செய்யப்படும் 10 மாணவர்களுக்குத் திங்கள் தோறும் ரூ.3,000/– வீதம் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

## 4.7. ஆய்வுத் துணைப் பணிகள்

நிறுவனத்தால் ஆண்டுதோறும் பன்னாட்டு/தேசியக் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியன நடத்தப்பட்டு வருகின்றன.

இவை மட்டுமன்றி பல்வேறு பொருண்மைகளில் தமிழாய்வுத் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு வழங்கிய ரூபாய் ஆறு இலட்சம் நிதியுதவியோடு 2022-2023-ஆம் ஆண்டில் தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலவழி 'தமிழியல் முன் ஆய்வுத் தொகுப்பு' என்னும் தலைப்பிலும்,அயல்நாட்டுத்தமிழர்புலவழி'சங்கத்தமிழர் அறம்'என்னும்தலைப்பிலும்,சமூகவியல்,கலைமற்றும் பண்பாட்டுப் புலவழி, 'தமிழ்நாட்டின் பழங்குடிகளின் வாழ்வியலும் மொழித்திறன் மற்றும் இன வரைவியல்' என்னும் தலைப்பிலும், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலவழி, 'ஐவர் ராசாக்கள் கதைச்சுவடி - பதிப்பும் ஆய்வும்' ஆகிய தலைப்புகளில் ஓராண்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.8. அயல்நாட்டவர்க்கும் தமிழ் அறியாத பிற மாநிலத்தவர்க்கும் தமிழ்மொழி கற்பித்தல்

உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியான தமிழ்மொழியின் மீது கொண்ட ஈர்ப்பால், அதனைக் கற்க விழையும், இந்தியாவின் பிற மாநிலத்தவரும், பிற நாட்டவரும்கற்பதற்கான ஏற்ற சூழலைக் கொண்டுள்ள இந்நிறுவன மொழிப்பயிற்சி ஆய்வுக் கூடத்தில் தமிழ்மொழி கற்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. 3 திங்கள் கால அளவு கொண்ட அறிமுக நிலை வகுப்பு, 6 திங்கள் கால அளவு கொண்ட சிறப்பு நிலை வகுப்பு என இரு பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், உலக நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, தென் ஆப்பிரிக்கா, சுவீடன், சீனா, கொரியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் 1975–ஆம் ஆண்டு முதல் 2022–ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ 625 பேர் நிறுவனத்தின் வழி தமிழ்மொழி பயின்றுள்ளனர்.

## 4.9. திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் சுமார் 2,500 சதுரஅடி பரப்பளவில் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக் கூடத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓவியங்கள், திருக்குறள் தொடர்பான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டுகளித்து வருகின்றனர். இதுவரை ஏறத்தாழ 15,000 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

## 4.10. திருக்குறள் ஓவியப் போட்டி

திருக்குறளில் அமைந்த அறநெறிக் கருத்துக்கள், பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில், தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் வழியாக திருக்குறள் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. இதில் தெரிவு செய்யப்படும் சிறந்த 15 ஓவியங்களுக்கு ரூபாய் நாற்பதாயிரம் வீதம் பரிசுத்தொகைவழங்கப்படுகின்றது.தெரிவுசெய்யப்படும் ஓவியங்கள் இக்காட்சிக்கூடத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## 4.11. உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

அயலகத் தமிழர் தொடர்பான அனைத்துத் தகவல்களையும், அயலகத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்புகொண்டு, பெற்று, ஒருங்கே கிடைக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன், நிறுவனத்தில் "உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்" தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தின் வழியாக ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டுத் தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியன தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 4.12. ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழியாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சங்க இலக்கண நூல்களான தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் மற்றும் சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற அறிவுக் களஞ்சியங்கள் நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்றால் அதற்கு முதற்காரணம் ஓலைச்சுவடிகளே ஆகும். இத்தகைய அரிய ஓலைச்சுவடிகளை பாதுகாத்துப் பதிப்பிப்பது நமது கடமை என்பதை நன்குணர்ந்ததால், நிறுவனத்தில் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவம், இலக்கணம், இலக்கியம், செய்யுள், காலக்கணிதம், காலச்சுவடுகள், தனிப்பாடல்கள், தனிக் குறிப்புகள் போன்ற தலைப்புகளில் ஓலைச்சுவடிக் கட்டுகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள அனைத்து சுவடிக் கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 600 சுவடிக் கட்டுகள் இம்மையத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேலும், ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு வழங்கும் ரூபாய் ஐந்து இலட்சம் நிதி நல்கையைக் கொண்டு, தமிழ்நாட்டிலும் மற்றும் பிற இடங்களிலும் உள்ள அறியப்படாத சுவடிகளை களப்பணி வாயிலாக அடையாளங்கண்டு அவற்றை எண்மியம் செய்து இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 46,450 தாள்சுவடிகள் அடையாளங்கண்டு எண்மியப்படுத்தப்பட்டுள்ளன.

## 4.13. பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

உலகின் தொல்குடிகளாகவும், அனைத்துத் துறைகளிலும் அகிலம் போற்றும் வண்ணம் தமது திறமையால் உலக மக்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய நம் பழந்தமிழர்களின் சிறப்புகளையும், அறிவியல் நுட்பங்களையும், ஆற்றல்களையும் உலகிற்கு பறைசாற்றும் வண்ணம் கற்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், அணிகலன்கள், புடைப்பு ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.346இலட்சம் சிறப்பு நிதியைக் கொண்டு நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி பொதுமக்களும், வெளிநாட்டவரும் கட்டணமின்றி கண்டு வருகின்றனர். இக்காட்சிக்கூடம்

விடுமுறையின்றி காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்களுக்காக இயங்கி வருகிறது. இதுவரை ஏறத்தாழ 50,000 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு நிதியுதவியோடு தயாரிக்கப்பட்டுள்ள 1. பழந்தமிழர் வாழ்வியல், 2. தமிழ் மருத்துவம், 3. நீர்மேலாண்மை, 4. போரியல், 5. ஆட்சித்திறன், 6. பழந்தமிழர் நெசவுத் தொழில்நுட்பம், 7. பழந்தமிழர் கட்டடக்கலை நுட்பம், 8. பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், 9. பழந்தமிழர் வேளாண்மை, 10. தமிழர் மரபுக் கலைகள் ஆகிய தலைப்புகளில் குறும்படங்கள் இக்காட்சிக்கூடத்தில் திரையிடப்பட்டு வருகின்றன.

### 4.14. அறக்கட்டளைகள்

தமிழ்ச் சான்றோர்களை போற்றும் வகையில் அவர்தம் பெயரில் தனியார் மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியோடு இதுவரை நிறுவனத்தில் 53 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் வழியாகசிறப்புபொழிவுகள்நடத்தப்பட்டு அப்பொழிவுகள் நூல்களாகவும்வெளியிடப்பட்டு வருகின்றன.இதுவரை 606 சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 2022–2023–ஆம் ஆண்டில் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

## 4.15. நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சிறப்புகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது இதன் வெளியீடுகளாகும். கருத்தரங்கக் கட்டுரை தொகுப்புகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப்பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரியநூல்கள் மறுபதிப்பு ஆகிய வகைப்பாடுகளில் பல நூல்கள், தமிழறிஞர்களும், தமிழாய்வு மேற்கொள்ளும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் நிறுவனத்தால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழிபெயர்ப்பு, தமிழ் மருத்துவம், காலக்கணிதம் ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ளன. இதுவரை 1291 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1309 நூல்கள் வெளியீட்டிற்கு அணியமாக உள்ளன.

## 4.16. தமிழியல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த சேவியர் தனிநாயகம் அடிகளாரால் 'Journal of Tamil Studies' (JOTS) எனும் ஆங்கில இதழ் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விதழ் தற்போது "தமிழியல்" எனும் பெயரில் ஆங்கிலம் மற்றும் தமிழ் என இருமொழிகளில் காலாண்டு இதழாக 50 ஆண்டுகளைக் கடந்து 115–ஆவது இதழ் வெளிவந்துள்ளது. தமிழியல்

இதழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், நிறுவன வெளியீடுகளின் அறிமுகம் ஆகியவை இடம்பெற்று வருகின்றன.

## 4.17. ஆய்வு நூலகம்

அறிவைவளர்க்கும்நூல்கள்சங்கமிக்கும்ஒரே இடம் நூலகமாகும். நிறுவனத்தில் 1970–ஆம் ஆண்டு சுமார் 100 நூல்களுடன் தொடங்கப்பட்ட நூலகம், இப்போது 1,34,000 நூல்களுடன் ஆராய்ச்சி நூலகமாக இயங்கி வருகிறது. ஆய்வுப்பணிகளை செவ்வனே மேற்கொள்ள இந்நூலகம் பெரிதும் பயன்படுகிறது. கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்கு பயில்வோர் என பலரும் இந்நூலகத்தால் பயனடைந்து வருகின்றனர்.

## 4.18. விரிவுரையாளர் / ஆராய்ச்சிக்கான தகுதித் தேர்வுகள் பயிற்சி

மாணவர்களுக்கான உயராய்வு உதவித்தொகை பெறுவதற்கும்கல்லூரி/பல்கலைக்கழகங்களில்வேலை வாய்ப்பினை பெறுவதற்கும், அடிப்படைத் தகுதிகளை அறுதியிட பல்கலைக்கழக நல்கைக்குழுவால் நடத்தப்பெறும்விரிவுரையாளர்/ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நிறுவனத்தில் கட்டணமின்றி ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமன்றி பிற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து

பயனடைந்துவருகின்றனர்.இதுவரை ஏறக்குறைய 500 மாணவர்கள் இவ்வகுப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 4.19. நிறுவன நிகழ்வுகள்

நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரதிதாசன் இருக்கை வழியாக 27.04.2022 அன்று பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை (29.04.2022) முன்னிட்டு 'புரட்சிக் கவிஞர் வாழ்கிறார்' என்ற பொருண்மையில் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

தேசிய நூலக நாள் (ஏப்ரல் – 23) விழா 28.04.2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது.

03.06.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 99–ஆவது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் 'முத்தமிழறிஞர் கலைஞர் – நினைவுகள்' என்னும் பொருண்மையில் நிறுவனத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

- தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.2.00இலட்சம் நிதியுதவியில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்களுக்கு 20.06.2022 முதல் 09.07.2022 வரை கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான கோடைக்கால பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்க முழுமுதற் காரணமாகயிருந்த, மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 15.09.2022 அன்று ரூபாய் ஐம்பதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனர் நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- உலக மொழிபெயர்ப்பு நாளான 30.09.2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனத்தில் மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்பட்டது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளான 21.10.1970-ஐ போற்றும் வகையில், 21.10.2022 அன்று ரூபாய் இருபதாயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவன நாள் விழா கொண்டாடப்பட்டது.

- 23.12.2022 அன்று தமிழ்நாடு அரசு நிதி நல்கையுடன் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வாயிலாக 2021-2022-ஆம் ஆண்டுக்கான திருக்குறள் நெறிபோற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற 15 ஓவியர்கள் ஒவ்வொருவர்க்கும் பரிசாக ரூபாய் நாற்பதாயிரமும் பாராட்டுப் பட்டயமும் வழங்கப்பட்டன.

- 11.01.2023 அன்று தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் சார்பில் நடத்தப்பட்ட அயலகத் தமிழர் நாளில் உலகெங்கும் தமிழ்மொழியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளையும், தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வரும் நிலைகளையும், இன்றைய அயலகத் தமிழர்களுக்கு எடுத்தியம்பும் முறையில் "அயலகத் தமிழர்களால் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழ் ஆய்வுகளும் போக்குகளும்"என்னும்தலைப்பில்பன்னாட்டுக் கருத்தரங்கம் நிறுவன ஒருங்கிணைப்பில் நடத்தப்பெற்றது.

## 4.20. பெருந்திட்டப்பணிகள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் பிறநாட்டு இலக்கியங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து நிறுவனம் மூலமாக அச்சிட்டு வெளியிடும்வகையில்,கிரேக்க காப்பியங்களான ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு திட்டம் நிறைவடையும் நிலையில் உள்ளது.

- சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து எளிமை பதிப்பாக வெளியிடுதல், தமிழ் செவ்வியல்

இலக்கிய நூல்களை உரையுடன் தொகுத்து வெளியிடுதல், திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூல் வெளியிடுதல் ஆகியவை தொடர்பான ஆயத்தப்பணிகள் தமிழ்நாடு பாடநூல் கல்வியல் பணிகள் கழகம் மூலம் முடிக்கப்பட்டு, நிறுவனத்தின் வாயிலாக சங்க இலக்கிய நூல்களைச் சந்தி பிரித்து வெளியிடுதலின் நூல் அச்சாக்கப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நூல்கள், செம்பதிப்புகளாக தமிழில் மொத்தம் 17 தொகுதிகளாக உலகத் தரத்துடன் வெளியிடுவதற்கு முதற்கட்டமாக 2022-2023-ஆம் ஆண்டில் ரூ.41,55,000/- அரசால் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அண்ணல் அம்பேத்கர் அவர்களால் எழுதப்பட்ட "The Annihilation of caste" மற்றும் "Riddles in Hinduism" ஆகிய இரு நூல்களுக்கான மொழிபெயர்ப்புப் பணிகள் தேசிய மொழிபெயர்ப்புத் திட்டம் (National Translation Mission) மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# இயல்–5

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## 5.1. தோற்றம்

தமிழ் வாழ்கின்ற நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15–ஆம் நாள் 1981–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. திராவிடத் தமிழன் அண்ணா அவர்களின் புகழ்பூத்த 'த', 'மி', 'ழ்', 'நா', 'டு' என்ற எழுத்துகளால் தனித்தனிக் கட்டடங்கள் உருவாக்கப்பட்டன.

'த'– கலைப்புலம், 'மி'– அறிவியல் புலம், 'ழ்'– மொழிப்புலம், 'நா'–சுவடிப்புலம், 'டு'– வளர்தமிழ்ப்புலம் என்ற ஐந்து எழுத்துகளில் ஐந்து புலங்கள் உருவாக்கப்பட்டன. ஐந்து புலங்களுக்குக் கீழான அதன் மையப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 26 துறைகள் உருவாக்கப்பட்டன. தமிழ் மொழி, இனம், பண்பாடு மற்றும் வரலாறு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. பிற பல்கலைக்கழகங்களைப்போல்தமிழ்ப்பல்கலைக்கழகம் இல்லாமல் இது உயராய்வு ஆய்வுகளை மையப்படுத்தி தனித்துவமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆரோக்கியமான பண்பாட்டினை அடிப்படையாகக்

கொண்ட மாணவர்களை உருவாக்கும் மிகச் சிறந்த பணியை தமிழ்ப் பல்கலைக்கழகம் செய்துகொண்டு வருகிறது.

## 5.2. குறிக்கோள்கள்

- தமிழ் மொழியிலேயே அறிவியல் பட்டங்களுக்கான பாடங்களை உருவாக்குதல். அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், மொழியியல் என பல்வேறு பட்டங்களுக்கு பாடங்களை உருவாக்குதல். இந்த பாடங்களை மாணவர்கள் தமிழிலேயே படிப்பதற்கு வழிவகை செய்தல்.
- தமிழின் பழைமையை பிற மொழியாளர்களுக்கு உணர்த்துதல்.
- பிற மொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு ஆராய்தல்.
- அழிந்து கொண்டிருக்கும் நம்முடைய பழைமை பண்பாட்டு மரபுகளை ஆவணப்படுத்துதல்.
- தமிழரின் அடையாளங்களான கலைகளை மீட்டெடுத்தல், பயிற்சி அளித்தல்.
- மரபுசார்ந்த மருத்துவத்தையும், பண்பாட்டையும் சமரசமின்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல்.

- தொல்லியல் எச்சங்களைக் கண்டறிதல்.
- ஓலைச்சுவடிகளில் உள்ள இலக்கியங்களை மின்னாக்கம் செய்வதன் மூலம் நமது பண்டைய இலக்கியங்களைக் காத்தல்.

## 5.3. மாணவர்கள் நேரடி சேர்க்கை விவரம்

2022-2023-ஆம் கல்வியாண்டில் முனைவர் பட்டப்படிப்பில் 36 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பில் 17 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் படிப்பில் 267 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டப் படிப்பில் 324 மாணவர்களும் இளங்கல்வியியல் பட்டப் படிப்பில் 200 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் பட்டப் படிப்பில் 2 மாணவர்களும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் 259 மாணவர்களும் சேர்க்கை பெற்றுள்ளனர். தற்போது பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை 1105 ஆக உள்ளது.

## 5.4. செயற்பாடுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு பெருந்திட்ட/குறுந்திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அணிவகுப்பில் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள 87 அறக்கட்டளைகள் மூலம் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- சித்த மருத்துவத் துறைப் பேராசிரியர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு நோய்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.
- தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,89,454 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

## 5.5. நடைபெற்று வரும் திட்டங்கள்

### 5.5.1. தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுகளை ஆவணப்படுத்துதல், மரபுக் கலைகளை மீட்டுருவாக்கம் செய்தல்

தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக் கலைகளை மீட்டெடுத்தல்,நாட்டுப்புறவியல் துறையை மேம்படுத்துதல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், சிலப்பதிகாரம் காட்டும் இசை, ஆடல் அமைதிகளை மீட்டுருவாக்கி ஆவணப்படுத்துதல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல், கைவினைப்

பொருள்கள் தயாரித்திட பயிற்சி அளித்தல், நூல்கள் வெளியிடுதல், கருத்தரங்கு நடத்துதல் ஆகிய திட்டப் பணிகள் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.5.2 யோகா பயிற்சி மையம் செயற்படுதல்

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் வழி யோகா பயிற்சி மையம் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இரு யோகா பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பெற்று யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 5.5.3. தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகள் பெறுதல்

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு உயர் புள்ளிகள் பெற அலுவலகக் கட்டடம், நூலகம், கூத்துக்களரி வளாகம் உள்ளிட்டவற்றின் கட்டமைப்புகளுக்கு சிறப்புச் சீர்க் காப்புப் பணிகள், மற்றும் பேராசிரியர்களின் ஆய்வுக்கான அடிப்படை நிதி (seed money) முதலான பணிகளுக்கு நல்கை ரூபாய் இரண்டு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.5.4. இணையவழிக் கருத்தரங்கம்

"கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. 150" என்ற தலைப்பில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கு 17.03.2022 அன்று தொடங்கி 15.04.2022 வரை 30 நாள்கள் நடத்தப் பெற்றது. பேராசிரியர்களும் அறிஞர்களும் ஆற்றிய கருத்தரங்க உரைகள் நூலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

### 5.5.5. தமிழ் இலக்கியங்கள் உலக மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடுதல்

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடுவதற்கு ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் சங்கத்தமிழ் நூலினை பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்வதற்கு முடிவாற்றப்பட்டது. இந்நூலின் வெளியீட்டாளர் தமிழ்க்கனி பதிப்பக உரிமையாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' நூலை மொழிபெயர்ப்பாளர்கள் திரு. சச்சிதானந்தம் பிரெஞ்சு மொழியிலும், திரு.சுசீந்திரன் ஜெர்மன் மொழியிலும், மொழிபெயர்ப்பு பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

## 5.5.6. தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை

தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஆய்விருக்கையில் ஓய்வுபெற்ற மொழியியல்துறை பேராசிரியர், ஆய்வறிஞராக நியமிக்கப்பட்டு, "அறிஞர் இராபர்ட்கால்டுவெல்லுக்குப்பின்திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுகள்" எனும் தலைப்பில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.6. தமிழ்ப் பண்பாட்டு மையம்/தமிழ் வளர் மையம்

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் வழி இசை, பரத நாட்டியம் மற்றும் மரபுக்கலைகளுக்குரிய சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் என இதுவரை 58 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்று வருகின்றது. உள்நாட்டில் இதுவரை 2274 மாணவர்கள், வெளிநாட்டில் 438 மாணவர்கள் என மொத்தம் 2712 மாணவர்கள் சேர்க்கப் பெற்று நேரடி பயிற்சி வகுப்புகள் மையங்களின் வழி நடைபெற்று வருகின்றன.

தமிழ் வளர்மையத்தின்வழி, தமிழ்மொழி சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாட்டிலும்

மற்றும் வெளிநாட்டிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப் பெற்று மையங்களில் நேரடி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

## இயல்–6

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## 6.1. தோற்றம்

"வீறுடைய செம்மொழி தமிழ்மொழி! உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி!" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் போற்றப்பட்ட சிறப்பிற்குரியது தமிழ்மொழி. உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியை உலகெங்கும் தழைத்தோங்கச் செய்யும் உலகத் தமிழர்களையும் உலகத் தமிழ் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, ஒரு குடையின்கீழ் கொண்டு வருவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு சீரிய முறையில் தமிழ் பணியாற்றிவரும் உலகத் தமிழ்ச் சங்கம் 1986இல் தொடங்கப்பெற்று சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

'நான்மாடக் கூடல்', 'தூங்கா நகரம்', 'கோயில் நகரம்', 'ஆலவாய்','விழாமலிமூதூர்','மணமதுரை','கடம்பவனம்', 'கூடல் மாநகர்' மற்றும் 'கிழக்கு நாடுகளின் ஏதென்ஸ்' என்றெல்லாம் பலவாறு புகழப்பட்ட பெருமைக்குரியது மதுரை மாநகரம். இத்தகு சிறப்புகளைத் தாங்கி நிற்கும் மதுரைக்கு மேலும் சிறப்பு சேர்க்கக்கூடியதாக திகழ்வது 'உலகத் தமிழ்ச் சங்கம் – மதுரை'. வானளாவிய கட்டடத்தில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில்

கலையரங்கம், கூட்ட அரங்கங்கள், நிருவாகப் பிரிவு, ஆய்வுப் பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை,குழுக்கூட்டஅரங்கம்மற்றும்விருந்தினர்தங்கும் அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. முன்பக்க சுற்றுச்சுவர் ஐயன் வள்ளுவனின் 1330 குறள்களையும் தாங்கி நிற்கின்றது.

உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழறிஞர்களும், ஆய்வு மாணவர்களும் பயன்பெறும் வகையில் 26,000க்கும் மேற்பட்ட நூல்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் காற்றோட்டமான நூலகம் செயற்பட்டு வருகின்றது. தற்போது ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் புனரமைக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு உலகத் தமிழ்ச் சங்கத்தினை பார்வையிடுவதற்காகவும், இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும் அயல்நாட்டுத் தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்தோடு வருகைதந்தும், கண்டும் பெருமிதம் அடைகின்றனர்.

## 6.2. நோக்கம்

- உலகமெல்லாம் பரவி வாழும் தமிழர்கள், தாங்கள் வாழும் நாடுகளில் தமிழ்ச் சங்கங்கள், அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆய்வு

மையங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து தமிழ் வளர்த்துவருகின்றனர். இத்தகு தமிழ் வளர்க்கும் நிறுவனங்களின் விவரங்களை தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல்;

- தமிழ் அமைப்புகள் அனைத்தையும் ஒருகுடையின் கீழ் பதிவு செய்து, ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவுதல்;
- இலக்கியம், பண்பாடு, தமிழ்மொழி பற்றிய செய்திகளை உலக நாடுகளிலெல்லாம் பரவச் செய்தல்;
- உலகநாடுகளில்வாழும்தமிழர்களின் வாழ்க்கை முறை,இலக்கியப்பணி ஆகியவற்றை தொகுத்து வழங்குதல்;
- உலகத் தமிழர் பற்றிய களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்;
- பொருளாதாரம்மற்றும்வாழ்வியல்காரணங்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் குடியேறிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, பிரெஞ்சு கயானா மற்றும் தற்போது குடியேறிய நாடுகளான அமெரிக்கா,பிரான்சு,ஆஸ்திரேலியா,

நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்;

- தமிழர் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

- உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், தமிழ்மொழி பற்றி ஆராய்ச்சி மையம் அமைக்க உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்;

- உலக நாடுகளில் தமிழர் வாழும் இரண்டு நாடுகளை, ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்து அந்நாடுகளில்ஆய்வரங்கங்கள்,கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடுகள் செய்தல்;

- தமிழ்நாட்டின் பழம்பெரும் கலைகளான சிற்பங்கள், நுட்பம் வாய்ந்த ஓவியங்கள், நாடகங்கள்,நாட்டுப்புறக்கலைகள்ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் உய்த்துணர உரிய வாய்ப்புகளை சங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தித் தருதல்;

## 6.3. சங்கத் தமிழரின் மாண்பினை உணர்த்தும் 'சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம்'

உலகத்தின் பார்வையை தமிழனின் பக்கம் திரும்ப செய்த மதுரையில், சங்கத் தமிழரின் காதல், வீரம், அறத்தின்பாற்பட்ட வாழ்க்கைமுறைகளை எடுத்துரைக்கும் சங்க இலக்கியப் பாடல் காட்சிகள் இன்றைய தலைமுறையினரும் உலகினரும், அறிந்து தெளியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கத் தமிழரின் பண்பாட்டையும், பெருமையையும் அறிந்து வியக்கும் வண்ணம் ஓவியங்கள், சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய கல்வெட்டுகளின் புகைப்படங்கள் என கலைப்பொருள்களை தன்னகத்தே கொண்டு சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் காண்போரின் கருத்தைக் கவரும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இந்தக் காட்சிக்கூடத்தில் அண்மையில் வரலாற்றுத்துறைமாணவர்களுக்கு படிப்பிடைப்பயிற்சி வழங்கும்விதமாக, சங்கத்தமிழரின் வாழ்வியலையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் வகையில், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. அவ்வகையில் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி, திண்டுக்கல் எம்.வி.முத்தையா மகளிர் அரசு கலைக் கல்லூரி ஆகியவற்றில் நடத்தப் பெற்ற

சொற்பொழிவுகளில் வரலாற்றுத் துறை மாணவர்கள் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

## 6.4. தமிழோடு கலக்கும் தமிழ்க்கூடல்

இரு நதிகள் சங்கமிக்கும் இடத்தை கூடல் என்பர். உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழாய்ந்து கூறும் அறிஞரோடு தமிழை நாடும் உள்ளங்கள் ஒன்று கூடும் நிகழ்வு 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் வாரந்தோறும் நடத்தப்பெற்று வருகின்றது. இங்கு சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை சங்கமிக்கின்றன. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.3,50,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6.5. அரங்கேற்றம் காணும் நூல்கள்

நூல்களை இயற்றுவோர், தாம் படைத்த நூல்களை அனைவரின் முன்னிலையிலும் அரங்கேற்றம் செய்வது தமிழரின் தொல்மரபு. அந்த மரபைத் தொடரும் வகையில், உலகத் தமிழ்ச் சங்கத்தில் நல்ல தமிழ் நூல்கள் திங்கள்தோறும் அரங்கேற்றம் காண்கின்றன. மதிப்புரை வழங்குவதோடு, பாராட்டுச் சான்றிதழும் நூலாசிரியர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் இதுவரை 21 நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.64,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6.6. 'தமிழால் முடியும்...!' பயிற்சித் திட்டம்

இளந்தமிழர்களின்வாழ்க்கைக்குவழிகாட்டுவதற்கு பயிற்சியளிக்கும் விதமாக 'தமிழால் முடியும்...!' என்ற பயிற்சி நடத்தப்பெற்றது. தமிழ் எவ்வகையில் எல்லாம் நம்மை வழிநடத்தும், வாழ வைக்கும், செம்மை மனிதராய் திகழச் செய்யும் என்பதை உணர்த்தும் நோக்கில் நடத்தப்பெற்ற 'தமிழால் முடியும்...!' என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி, பயிற்றுநர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு மூன்று நாள்கள் நடத்துவதற்கு 2022−2023−ஆம் நிதியாண்டிற்கு ரூ.15,55,000/−நிதிஒப்பளிப்புசெய்யப்பட்டுள்ளது.இதில் 38 மாவட்டங்களில் இருந்து வந்த 200 மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்தனர். பல்துறை அறிஞர்கள் பங்கேற்று மாணவர்களை நெறிப்படுத்தினர்.

## 6.7. புலம்பெயர் தமிழர்களை அறிந்து தெளிதல்

இயற்கை, போர், தொழில், கல்வி, திருமணம் என பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயர்ந்து உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் வாழ்வியலை அறிந்து தெளிய 'ஐயை உலகத் தமிழ் மகளிர் மன்றத்துடன்' இணைந்து 'உலகத் தமிழ் இலக்கிய விழா'வில் 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கமும், 'பெண் சக்தி' என்னும் பன்னாட்டுக் கவியரங்கமும் மற்றும் 'தமிழர் பண்பாடும் நாகரிகமும் இன்று வளர்கிறதா? தேய்கிறதா?' என்ற வாழ்வியல் பட்டிமன்றமும் நடத்தப்பெற்றன.

## 6.8. சேரரைப் போற்றும் தேசியக் கருத்தரங்கம்

கேரள திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து மூவேந்தர்களில் சேரர்களின் பணிகளையும், இலக்கியப் பங்களிப்புகளையும் நினைவுகூரும் வகையில் 'செந்தமிழும் சேரநாடும்' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பெற்று நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

## 6.9 இலக்கியம், இலக்கணம் அறிவோம் – பயிற்சி

தமிழ் மொழியின் எல்லை என்பது அதன் இலக்கிய வளத்தால் காலந்தோறும் விரிவடைந்து வருகின்றது. தமிழ் மொழியின் இலக்கிய செழுமையையும் இலக்கண வளமையையும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் 100க்கும் மேற்பட்டோருக்கு 15 நாள்கள் 'இலக்கியம், இலக்கணம் அறிவோம்...!' என்னும் கட்டணமில்லா பயிற்சி அளிக்கப்பெற்றது. சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை, இலக்கணம் மற்றும் படைப்பாக்கப் பயிற்சி என அனைத்து வகையிலும் பங்கேற்றோரை பயனடையச் செய்வதாக இந்தப் பயிற்சி வழங்கப்பெற்றது.

## 6.10. நிறுவனர் நாள்

உயரிய நோக்குடன் உலகத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றுவாய்க்கு வித்திட்ட மாண்புமிகு மேனாள்

முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் பிறந்தநாளான ஜனவரி 17ஆம் நாள், ஆண்டுதோறும் நிறுவனர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் ரூ.1,30,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

## 6.11. அயலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் நூல்வெளியீடு

அயலகத் தமிழ் இலக்கியம் என்பது இன்று அனைவராலும் விரும்பத்தக்க வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அதிலொரு சிறு பங்களிப்பினை வழங்கும் நோக்கில், மலேசியா, இயல் பதிப்பகத்துடன் இணைந்து மலேசிய தமிழ்ப் படைப்பாளர்களின் 5 நூல்கள் வெளியிடப்பட்டன.

## 6.12. அயலகத் தமிழறிஞர்களின் பணிகளுக்குப் பெருமை சேர்த்தல்

உலகத் தமிழர்கள் பல இடர்ப்பாடுகளைக் கடந்து, தமிழ் வளர்ச்சிக்கென தங்களது பங்களிப்பினை செலுத்திசாதனைகள்புரிந்துவருகின்றனர்.அவர்களின் நிகரில்லாப் பணிகளை அங்கீகரிக்கும் நோக்கிலும், அவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும் நோக்கிலும் ஆண்டுதோறும் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 6.13. அணி சேர்க்கும் அறக்கட்டளைகள்

தமிழுக்குத்தொண்டுசெய்யும்உன்னதநோக்கத்தில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஐந்து அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அவை,

- சீனக்கவிஞர் யூசி – திருக்குறள் அறக்கட்டளை
- சிந்தனைக் கவிஞர் கவிதாசன் – நூற்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளை
- ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழக அறக்கட்டளை
- சிங்கப்பூர் முனைவர் ஆ.ரா.சிவகுமாரன் – தேன்மொழி அறக்கட்டளை
- தமிழ் மரபினர் பண்பாட்டுச் சங்க அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளைகளின் சார்பில் ஆண்டுதோறும் நிகழ்வுகள் நடத்தப்பெற்று வருகின்றன. அவ்வகையில் சிங்கப்பூர், முனைவர் ஆ.ரா.சிவகுமாரன் – தேன்மொழி அறக்கட்டளையின் சார்பில் சொற்பொழிவு நடத்தப்பெற்றது. மேலும், சிந்தனைக்கவிஞர் கவிதாசன் – நூற்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளையின் சார்பில் சொற்பொழிவு நடத்தப்பெற்றது. அந்நிகழ்வில், இதழியலாளர் சமஸ் அவர்கள் பங்கேற்று பொழிவுரை வழங்கினார். கல்லூரி மாணவர்கள் பங்குபெற்ற குறுங்கதைப் போட்டி நடத்தப்பெற்று ரூபாய் 5,000/–,

ரூபாய் 3,000/–, ரூபாய் 2,000/– என மூன்று பரிசுகள் வழங்கப்பெற்றன.

## 6.14. உயரும் உறுப்பினர் சேர்க்கை

தமிழ் சார்ந்த கூட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் இதுநாள்வரை 2500க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 6.15. அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா

அயலகத் தமிழர்களின் படைப்புகளுக்காக 'அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா' என்ற சிறப்புப் பிரிவு அமைக்கப் பெற்றுள்ளது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் தமிழர்களின் படைப்புகளையும் அங்குப் பதிப்பிக்கப்படும் தமிழ் நூல்களையும் காட்சிப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் நிலையாக உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் 'அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா' அமைக்கப்பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கெனத் தொடர் செலவினமாக ரூ.5,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.16. உள்ளக்கிடக்கையை உரைக்கும் அயலகத் தமிழ் இதழ்கள்

அயலகத்தில் வாழும் தமிழர்கள் தங்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தவும் பரிமாறிக்கொள்ளவும் துணை நிற்பவை இதழ்களாகும். புலம்பெயர்தமிழர்களால்பல்வேறுசிக்கல்களுக்கிடையே நடத்தப்பெற்று வரும் இதழ்களும், மின்னிதழ்களும் கண்டறிந்து வகைப்படுத்தப்பட்டு உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் அடங்கிய களஞ்சியம் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது.

## 6.17. வெளியீடுகளின் அணிவரிசை

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று நூலாக்கம் செய்யப்பெற்றுள்ளன. அதில் 27 நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில், 'உலகத் தமிழ் அமைப்புகள் – தொகுதி 2', 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்', 'பொன்மனச் செம்மல் – ஒரு பன்முகப் பார்வை', 'செந்தமிழும் சேரநாடும்' ஆகிய நூல்கள் இந்த ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளன. இவை தவிர, மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டினைப் போற்றும் வகையில் நடத்தப்பெற்ற இணையவழிக் கருத்தரங்கத்தின் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று

'பாரெங்கும் பாரதி' என்ற ஆய்வுக்கோவையாகவும், நிறுவனர் நாள் விழா நூலும் வெளியிடப்பட்டுள்ளன.

## 6.18. 'உலகத்தமிழ்'பன்னாட்டு மின் ஆய்விதழ்

உலகத் தமிழர்களை இணைக்கும் கருவியாக உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 'உலகத்தமிழ்' பன்னாட்டு மின் ஆய்விதழ் காலாண்டிற்கொருமுறை வெளியிடப்பெற்று வருகிறது. இதுநாள் வரை 18 காலாண்டிதழ்கள் வெளிவந்துள்ளன. இதனுடன் அனைவரும் படித்து மகிழும் வகையில் பல்சுவை இதழாக திங்கள்தோறும் மின்னிதழாகவும் வெளிவருகின்றது. இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6.19. உலகத் தமிழமைப்புகளின் விவரம்

உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்துள்ள 257 தமிழ்ச் சங்கங்களின் விவரங்கள் உலகத் தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் (www.utsmdu.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## இயல் -7

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil) தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஒன்றியக் கல்வி அமைச்சகத்தின் மொழிப் பிரிவின் கீழ் செயல்பட்டுவரும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 2004–ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் தமிழ் மொழியை செம்மொழியாக ஒன்றிய அரசு அறிவித்த பின்னர் ஏற்படுத்தப்பட்டதாகும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்காக சென்னை பெரும்பாக்கத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட (16.58 ஏக்கர்) இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு 2017ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.24,65,47,000/– ஒதுக்கீடு செய்தது. புதிய கட்டடக் கட்டுமானப் பணி ஒன்றிய பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், பணிகள் அனைத்தும் முடிவடைந்ததும் கடந்த ஜனவரி 12ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவராக செயலாற்றி வருகிறார். ஆட்சிக்குழு, நிதிக்குழு மற்றும் கல்விக்குழுவால் நிறுவனத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், கி.பி. 600–க்கு முந்தைய காலத்தை செவ்வியல் காலமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் ஆவணப்படுத்தி பாதுகாப்பதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழின் தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோளாக இந்நிறுவனம் கொண்டுள்ளது:

❖ இந்தியப் பண்பாட்டின் பன்முக இயல்பு பற்றியும், இந்தியப் பண்பாட்டிலும் மரபிலும் தமிழியக் கூறுகளின் பங்களிப்புப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுத்துதல்.

❖ பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழின் தொன்மை குறித்து ஆராய்தல்.

❖ தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்தல்.

❖ திராவிட மொழிகளின் வரலாற்று ஒப்பாய்வையும், வரலாற்று முறையில் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொள்ளுதல்.

❖ 41 செவ்வியல் தமிழ் நூல்களையும் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுதல்.

❖ செவ்வியல் காலத்திற்குட்பட்ட 41 நூல்களையும் சுவடிகள், பழம்பதிப்புகள், உரைமேற்கோள்கள் கொண்டு ஒப்பிட்டு மரபுவழி மூலபாடச் செம்பதிப்புகளை உருவாக்குதல்.

❖ முதுகலை, முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு உள்ளிட்ட பட்டப் படிப்புகளில் செம்மொழித் தமிழைக் கற்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.

❖ கல்வி நிறுவனங்களிடமிருந்தும், தனிநபர்களிட மிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாக பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

❖ செம்மொழித்தமிழின்சிறப்புகளைவெளிப்படுத்தும் வகையில் தேசிய, பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள்,பணியரங்குகளை நடத்துதல்,தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.

❖ செம்மொழித்தமிழின்சிறப்புகளைவெளிப்படுத்தும் ஆய்வு நூல்களைப் பதிப்பிக்க உதவி செய்தல்.

❖ செம்மொழித் தமிழில் முனைவர் பட்டமும், முனைவர்பட்ட மேலாய்வும்மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குதல்.

❖ செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு நல்கியோர்க்கு விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்தல்.

❖ செம்மொழித் தமிழ்க் கல்வியை இந்தியாவிலும் அயல்நாட்டிலும் மேம்படுத்துதல்.

❖ செவ்வியல் நூல்கள் சார்ந்த பழஞ்சுவடிகளையும் பதிப்புகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்தல்.

❖ தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பயின்றுவரும் மொழியாட்சியைப் புரிந்து கொள்ளுதல், விளக்குதல்,நயம்பாராட்டுதல்ஆகியதிறன்களைக் கற்போர் அடைய உதவுதல் என்பதனை நோக்கமாகக் கொண்டு இணையவழிச் செம்மொழிக்கல்வித்திட்டத்தைநிறைவேற்றுதல்.

- ❖ 41 செவ்வியல் நூல்களுக்கான தரவகம் உருவாக்குதல், இலக்கண, இலக்கியக் கல்வி, இயற்கை மொழி ஆகியவற்றிற்கு பயன்படும் மென்பொருள்களை உருவாக்குதல்.
- ❖ செம்மொழித் தமிழ் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வழங்கும் மையமாகச் செயல்படுதல்.

**சாதனைகள்**

- ❖ பல்வேறு சங்க இலக்கிய நூல்கள், ஆய்வு நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.
- ❖ உலகப் பொதுமறையாம் திருக்குறள் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மணிப்புரி, குஜராத்தி, பஞ்சாபி, இந்தி, சமஸ்கிருதம், ஒடியா, உருது, அரபு, மலையாளம், மராத்தி, வாக்ரிபோலி, நேபாளி, படுகு, கெமர், பெர்சியன் ஆகிய 19 உலக மற்றும் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- ❖ தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் உரை ஆகிய நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கியம் முழுவதும் கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இறையனார் களவியல் உரை, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் செம்பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- 60 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 267 முனைவர் பட்ட மாணவர்களுக்கும் 43 முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.
- திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் செம்மொழித் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.3000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- 39 செம்மொழிப் பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- திருக்குறள், முத்தொள்ளாயிரம், நானாற்பது, தொல்காப்பியம் ஆகிய நூல்கள் அலைபேசி செயலிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

## செம்மொழித் தமிழாய்வு நிறுவன விருதுகள்

- ❖ இந்திய அறிஞர் ஒருவருக்கு ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தொல்காப்பியர் விருது வழங்கப்படுகிறது.
- ❖ வெளிநாட்டினர் ஒருவருக்கும், வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவருக்கும் ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் குறள்பீட விருதுகள் வழங்கப்படுகின்றன.
- ❖ இந்திய இளம் அறிஞருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையுடன் இளம் அறிஞர் விருது வழங்கப்படுகிறது.

## கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை

- ❖ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008–ஆம் ஆண்டு ரூபாய் ஒரு கோடி வைப்புத் தொகையுடன் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை நிறுவப்பட்டது.
- ❖ இவ்வறக்கட்டளையின் மூலம் செம்மொழித் தமிழுக்கு குறிப்பிட்ட வரைமுறைகளின் கீழ் தொண்டாற்றிய தமிழறிஞர் அல்லது நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் பத்து இலட்சம் பரிசுத் தொகையுடன் கலைஞர் மு.கருணாநிதி

செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படும். அவ்வகையில் 2009–ஆம் ஆண்டுமுதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 2020, 2021, 2022 ஆகிய மூன்று ஆண்டுகளுக்குரிய விருதுகள் 22.08.2022–ஆம் நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டன.

## செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்

- மணிமேகலைமொழியர்ப்புத்திட்டம்(20மொழிகள்)
- தொல்காப்பியம் மொழிபெயர்ப்புத் திட்டம் (20 மொழிகள்)
- திருக்குறள் கிரியோல், மலாய், டேனிஷ், ஜப்பானிஸ், பர்மீஸ், சிங்களம், துளு, அஸ்ஸாமி, கொரகா, காஸ்மீரி, மைதிலி, அவதி, கொடவா, டோக்ரி, போஜ்புரி, போடோ ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுவிரைவில்வெளியிடப்படும்.
- செவ்விலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்புத் திட்டம் (5 மொழிகள்)
- புகழும், புலமையும் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு செவ்விலக்கிய சிறப்புகளைக் காட்சிப்படுத்தி வலையொளி (YouTube) மூலம் பரவச்செய்யும் திட்டம்

❖ பார்வை மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் 46 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக விரைவில் வெளியிடப்படும்.

❖ இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டம்.

இயல் –8

# தமிழ் வளர்ச்சித் துறையின்

# நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

இன்று தமிழர்கள் உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரினும், அவர்களை உள்ளத்தாலும் உணர்வாலும் ஒன்றிணைப்பது தாய்மொழியாம் நம் தமிழ்மொழியே. அவ்வகையில் உலகளாவிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்மொழி, பண்பாடு, கலை சார்ந்த உதவிகளை அளித்து, உலகமெலாம் தமிழோசை பரவ வழிவகை செய்தல்.

தமிழ் இலக்கியங்களை, உலக மொழிகளில் மொழிபெயர்த்து, தமிழின் கருத்து வளத்தையும், பண்பாட்டுத் தளங்களையும் உலகறியச் செய்தல்

தமிழ் வளர்ச்சி தொடர்பான அரசின் செயற்பாட்டு அமைப்புகளை, மேலும் வலிமையாக்கி பணிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழி செயலாக்கத்தை முழுமையான அளவில் செயற்படுத்த ஏதுவாக அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆட்சிமொழித் திட்டம் தொடர்பான பயிற்சி திட்டத்தைவிரிவாக்கிஅனைத்துப்பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் திட்டம் வகுத்து செயற்படுத்துதல்.

சொற்குவை வலைதளத்தில், நவீன அறிவியல் உலகத்தில் தோன்றும் புதிய புதிய பிற மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ் கலைச் சொற்கள் பதிவேற்றம் செய்வதும் மற்றும் தமிழ் கலைச் சொல் தொடர்பான பொதுமக்களின் ஐயங்களை தீர்ப்பதும், தமிழறிஞர்கள் தமிழார்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து புதிய கலைச் சொற்களைத் திரட்டி ஒருங்கே தொகுத்து சீரிய முறையில் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக பதிவேற்றம் செய்து பொதுமக்கள் பயன்பெறச் செய்தல்

துறைவாரியான செயற்பாடுகளில் தமிழ் வளர்ச்சிக்கு தனிக் கவனம் செலுத்தி, உரிய புதிய திட்டங்களை வகுத்து செயற்படுத்துதல் ஆகியவற்றை நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களாகக் கொண்டு துறை செயலாற்றி வருகிறது.

## நிறைவுரை

***"தமிழுண்டு தமிழ்மக்களுண்டு – இன்பத்***
***தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"***

என்னும் பாவேந்தரின் வாக்கிற்கேற்ப, தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஓய்வின்றி ஈடுபட்டு வருகிறது.

மொழியின் வளர்ச்சியும், பயன்பாடும் நம்மோடு நின்றுவிடாமல், அடுத்துவரும் தலைமுறைக்கு நாம் அளிக்கும் பெருஞ் செல்வமாக விளங்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், மொழிபெயர்ப்புத் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவை காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் சீரார்ந்த பணிகளை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றன.

# வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு
# 2023–2024

| வ. எண் | துறை | 2023–2024 வரவு – செலவு மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ் வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம் | 12,95,87 |
| 2 | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 57,88,33 |
| 3 | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 4,41,40 |
| 4 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 10,76,11 |
| 5 | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 29,47,29 |
| 6 | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 1,87,55 |
| **மொத்தம்** | | **117,36,55** |

**தங்கம் தென்னரசு**

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம்,**
**தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு,**
**தொல்லியல் துறை அமைச்சர்.**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.6.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு கனவு இல்லத் திட்டத்தின்கீழ் ஆறு தமிழ் எழுத்தாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பில், குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு அவர்தம் மரபுரிமையருக்கு 21.12.2022ஆம் நாளன்று நூலுரிமைத் தொகை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.01.2023 ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் செய்து சிறப்பித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் திருநாளான 16.01.2023 அன்று வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவர் விருது உள்ளிட்ட 10 விருதுகளை வழங்கினார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.